விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை (07.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## தனித்திருந்த மூதாட்டி கழுத்து நெரித்து கொலை

### தெல்லிப்பழையில் சம்பவம் நகை, பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
வீட்டில் தனித்திருந்த மூதாட்டி கொலை செய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளை 24

## ஐ.எஸ் இன் ஆயுத உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் நேற்று கண்டுபிடிப்பு

### சஹ்ரான் உட்பட 38 பேர் பயிற்சி பெற்ற முகாம் நுவரெலியாவில் முற்றுகை; இருவர் கைது

(கொழும்பு)
ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளின் ஆயுத உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட 38 பேர் பயிற்சி பெற்ற முகாம் ஒன்றும் நுவரெலியாவில் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று கண்டுபிடிக்கப்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முகாம் தொடர்பான அதிர்ச்சி தரும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப்பகுதியில் அமைந்துள்ள ஓமடியாமடுவில் இந்த 24

## வீட்டில் இருந்தவர்களை வாள்முனையில் அச்சுறுத்தி

### 20 பவுண் நகை, பணம் கொள்ளை; புலோலியில் அதிகாலை சம்பவம்

(கரணவாய்)
வீட்டை உடைத்து உள் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை 24

## தனிப்பட்ட முரண்பாடே சுண்டுக்குளிக்கு அச்சுறுத்தல் கடிதம்

### ருவான் குணசேகர

(கொழும்பு)
தனிப்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாகவே யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபருக்கு அச்சுறுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர 24

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

## பேராசிரியர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியால் பதவி நீக்கம்

(கொழும்பு)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 30ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமையவே இந்த பதவி நீக்கப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகா 23

## 13 பவுண் தாலிக்கொடி பட்டப்பகலில் அறுப்பு

### கச்சேரி - நல்லூர் வீதியில் துணிகரம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் சென்ற குடும்பப் பெண்ணிடம் 13 தங்கப் பவுண் 24

### பயங்கரவாதிகளின் செயற்பாட்டினால்

# மக்களின் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்பட இடமளிக்க முடியாது

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்து

**(கொழும்பு) அடிப்படைவாத சிறிய குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத செயற்பாட்டினால் நாட்டின் ஒட்டுமொத்த மக்களிடையேயும் காணப்படும் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாதென ஜனாதிபதி வலியுறுத்தினார்.**

ஒருவருக்கொருவர் அச்சத்தோடும் சந்தேகத்தோடும் நோக்குவதனால் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு, பயங்கரவாதத்தை உரியவாறு இனங்கண்டு அதனை பாதுகாப்புத்துறையினர் வெற்றிகரமாக அழித்துவரும் பின்னணியில் புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் நாட்டினுள் அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகுமென 23



## மன்னாரிலுள்ள அமைச்சர் ரிஷாத்தின் வீடு சோதனை

(மன்னார்)
மன்னார் - தாராபுரம் துர்கி நகர் பகுதியிலுள்ள வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் வீட்டை பாதுகாப்பு படையினர் நேற்று பகல் சோதனை செய்துள்ளனர். 23

## பயங்கரவாதிகளின் சொத்துப் பெறுமதி 840 கோடி ரூபாய்!

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளின் சொத்துப் பெறுமதி 840 கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
உயிர்த்த ஞாயிறு 23

### கூட்டமைப்பின் முன்னாள்

## பாராளுமன்ற உறுப்பினருக்கு 4வருட சிறை

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் அம்பாறை23

## ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் பயிற்சி பெற்ற 11 பயங்கரவாதிகள் காத்தான்குடியில் கைது

(கரணவாய்)
ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பில் பயிற்சி பெற்ற பதினொரு பயங்கரவாதிகள் நேற்று திங்கட்கிழமை அரச புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் சாய்ந்தமருது, சம்மாந்துறை, காத்தான்குடி ஆகிய பகுதிகளில் தேடுதல்கள் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் [illegible] கையின் அம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத பயிற்சி முகாமில் அதன் தலைவர் சஹ்ரான் தலைமையில் பயிற்சி பெற்ற பதினொரு பேர் நேற்று திங்கட்கிழமை அரச புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டனர். காலையில் இருந்து மாலை [illegible]

### பல்கலை மாணவர்களின் விடுதலை

## தொடர்பில் பரிசீலிக்கப்படும்

### கூட்டமைப்பிடம் சட்டமா அதிபர்

(கொழும்பு)
கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை முழுமையாக விடுதலை செய்வது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என பதில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலை தொடர்பாக பதில் சட்டமா அதிபருடனான நேற்றைய சந்திப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் முன்னெடுக் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இரு தரப்பும் வழிபட அனுமதி

## முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பு

முல்லைத்தீவு - செம்மலை கிழக்கு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நுழைந்த பௌத்த பிக்குகள், அமைதியற்ற நிலைமையை உருவாக்கியது தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த தைப்பொங்கல் தினத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது, அருகிலுள்ள விகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட சில பிக்குகள் வந்து அமைதியற்ற நிலைமையை உருவாக்கினர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில், பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டிருந்தது. நேற்று வழக்கின் தீர்ப்பளிக்கப்பட்டது.


இரு தரப்பினரும் அப்பகுதியில் வழிபட முடியும். எவரும் அடுத்தவருடைய வழிபாடுகளுக்கு இடையூறு செய்யக்கூடாது எனவும், இருதரப்பினரும் அப்பகுதியில் கட்டடங்களை அமைப்பதானால் உரியவர்களிடம் அனுமதி பெறவேண்டும்.

நிபந்தனைகளின் அடிப்படையில் ரூபாய் இரண்டு இலட்சம் பெறுமதியான பிணையில் இரு தரப்பையும் செல்லுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

பிணையின் நிபந்தனைகளை மீறினால், உரிய தண்டனைகள் வழங்கப்படுமெனவும், இருதரப்பினரையும் மன்று எச்சரித்திருந்தது. (ம-3,281)

# இ.போ.ச தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் மாநகர முதல்வர் ஆர்னல்ட் சந்திப்பு

## யாழ்.நகர அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



யாழ் நகர அபிவிருத்தித் திட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் தரிப்பிட அமைப்புத் தொடர்பில் வடமாகாண இணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் யாழ் மாநகர முதல்வருக்கும் இடையேயான சந்திப்பு நேற்று காலை 10 மணிக்கு யாழ் மாநகர சபையில் இடம்பெற்றது.

யாழ் மாநகர முதல்வருக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண இணைந்த தொழிற்சங்கத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் பிரதிபலிப்பாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ் நகரை அழகுபடுத்தும் திட்டத்தில் யாழ் பஸ் தரிப்பிடமும் உள்வாங்கப்பட்டமையால் திட்டங்கள் வகுக்கப்படும்போது தமது சாலை ஊழியர்கள் சேவையை மேற்கொள்ளும்போது இடையூறுகள் இடம்பெறாவண்ணம் திட்டங்கள மேற்கொள்ள வேண்டுமென இணைந்த தொழிற்சங்கத்தலைவர் எஸ்.அருள் பிரகாஸ் முதல்வரைக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்தும் நாம் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகள் இருந்தால் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என முதல்வரால் தெரிவிக்கப்பட்டது. (ம-10)

# தாக்குதல் தொடர்பில் ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கண்டறிவதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றிற்கு வழங்குமாறு கோரிக்கை விடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரும ஆவணத்தில் 83 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மாணவன் படுகாயம்

நுங்கு வெட்டுவதற்காக மரத்தில் ஏறிய மாணவன் கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்று சரசாலை தெற்கில் இடம் பெற்றுள்ளது.

சரசாலையைச் சேர்ந்த காண்டீபன் டினுசன் (வயது-15) என்ற மாணவனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30,114)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதை

# ஜனாதிபதி, பிரதமர் இணைந்து வெளிப்படுத்த வேண்டும்

## – சபாநாயகர் கரு



இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் நாட்டில் பாதுகாப்பு குறித்து நிலவிய அச்சுறுத்தல் பாதுகாப்பு படையினரால் நீக்கப்பட்டுள்ளது.

எனினும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதிபதியும் பிரதமரும் ஒரே விதமான கருத்தினை முன்வைத்தால் மாத்திரமே மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை குறைவடையும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வதந்திகளை நம்பி பதற்றமடையாமல் பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட ஏனைய பாதுகாப்பு பிரிவினால் வெளியிடப்படும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய பொதுமக்கள் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ம-3)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிநாட்டு புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை பாராளுமன்றத்திற்கு உச்சக்கட்ட பாதுகாப்பு



(கொழும்பு)

இலங்கைப்பாராளுமன்றமும்ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளால் தாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதனால் நாடாளுமன்ற வளாகத்தை சுற்றி மேலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சீ.சீ.ரி.வி.கமராக்களும் அதிகம் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் ஸ்கானர்கள், பாதுகாப்பு சார்ந்த உபகரணங்கள் உள்ளிட்ட சில முக்கிய பொருட்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் வேண்டாம்

## கர்தினால் கோரிக்கை



(கொழும்பு)

எந்தவொரு முஸ்லிம் மக்கள் மீதும் தாக்குதல் நடத்த வேண்டாம் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

நீர்கொழும்பு - பலகத்துறைப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட மோதல், இன வன்முறையாக மாறியுள்ளது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களின் உடைமைகளை சேதப்படுத்தி பெரும் அட்டகாசம் செய்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உடன் அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும் சில குழுக்கள் அந்தப் பகுதி மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறான மோசமான தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்தவொரு நபரையும் யாரும் துன்புறுத்தவோ, காயப்படுத்தவோ கூடாது. கிறிஸ்தவ மக்களிடம் விசேட கோரிக்கையாக கேட்கிறேன்.

முஸ்லிம் மக்கள் எமது சகோதரர்கள். அவர்களை எந்த வகையிலும் காயப்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். வன்முறையில் யாரும் ஈடுபட வேண்டாம் எனவும் பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பலகத்துறைப் பகுதியில் தடிகள், பொல்லுகள், வாள்களுடன் வந்த கும்பல், முஸ்லிம் மக்களின் வீடுகளுக்குப் புகுந்து அட்டகாசம் செய்துள்ளமையால் அந்தப் பகுதியில் அச்ச நிலைமை தொடர்கிறது. எனினும் முப்படையினரும் அந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக அறிவித்துள்ளனர். (இ-7)

# போதைப்பொருள் வர்த்தகர் மீதே துப்பாக்கிச்சூடு

## புத்தளத்தில் தீவிர பாதுகாப்பு

(புத்தளம்)

புத்தளத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தையடுத்து குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.


மேலும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் போதைப்பொருள் வர்த்தகர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்து குறித்த சந்தேகநபரை கைது செய்ய பொலிஸார் முற்பட்ட போது, அவர் தாக்குதல் மேற்கொண்டு தப்பிச்செல்ல முயன்றுள்ளார். இதன்போதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மன்னார் ஊடாக தமிழ்நாடு சென்றிருக்கலாம் சஹ்ரான்

## த ஹிந்துவிடம் இராணுவத்தளபதி





உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிம், தமிழ்நாடு வழியாக இந்தியாவின் ஏனைய நகரங்களுக்குப் பயணித்திருக்கலாம் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் இந்தியாவுக்கு விமானம் மூலம்பயணம்மேற்கொண்டதற்கான எந்த குடிவரவு, குடியகல்வு பதிவுகளும் இல்லை என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவர் மன்னார் ஊடாக தமிழ்நாட்டுக்கு கடல் வழியாக பயணம் மேற்கொண்டிருப்பதற்கு சாத்தியங்கள் உள்ளன என்று இராணுவத்தளபதி 'தஹிந்து' நாளிதழிடம் தெரிவித்தார்.

"இந்தியா உள்ளிட்ட பிராந்தியத்திலுள்ள புலனாய்வு அமைப்புக்களுடன் இணைந்து, இந்த பிராந்திய வலையமைப்புகள் குறித்து,இலங்கை விசாரித்து வருகிறது. சஹ்ரான் 2018 பிற்பகுதியில் பெங்களூர், காஷ்மீர், கேரளா ஆகிய பகுதிகளுக்கு சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

வெளியிலுள்ள அடிப்படைவாதிகளுடன் இணைந்து வலையமைப்பை உருவாக்குவதற்கு அவர் முற்பட்டிருக்கலாம்.

அவர்கள் அங்கு என்ன செய்தார்கள் என்று எமக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனால், நிச்சயமாக அவர்கள் அங்கு யாத்திரிகர்களாக செல்லவில்லை.

பலர் தற்போது கைது செய்யப்பட்டு காவலில் உள்ளனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் விசாரித்து வருகின்றனர். குண்டுத் தாக்குதல்களுக்கு TATP அல்லது triacetone triperoxide வெடிமருந்துகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை மிகவும் சிக்கலான குண்டுகள் அல்ல.

அவர்களில் இருவர் சலகை இயந்திர நேரக்கணிப்பு பொறிகளை வைத்திருந்துள்ளனர். தற்கொலைக் குண்டுதாரிகள் இணையத்தள வழிகாட்டல்களைப் பயன்படுத்தி இவற்றை உள்ளூரில் தயாரித்திருக்கலாம்.

அதிகபட்ச பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக படையினர் தொடர்ந்தும் உயர்ந்தபட்ச விழிப்பு நிலையில் உள்ளனர்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக இந்திய அதிகா ரிகள், இந்தியாவில் சஹ்ரானின் நடமாட்டங்களை தம்மால் உறுதிப்படுத்த முடியவில்லை என்று 'த ஹிந்து'விடம் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த- ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# சமூக வலைத்தளங்களுக்கான தற்காலிகத்தடை நேற்று நீக்கம்

(கொழும்பு)

வட்ஸ்அப், வைபர் மற்றும் முகப்புத்தகம் ஆகியவற்றுக்கு இலங்கையில் விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டு ள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குத லைத் தொடர்ந்து வட்ஸ்அப், வைபர் மற்றும் முகப்புத்தகம் ஆகியவற்றுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த தடை ஏப்ரல் 30 ஆம் திகதி நீக்கப்பட்டது.

இந்நிலையில் நீர்கொழும்பில் இரு குழுக்களுக்கு இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையையடுத்து பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மீண்டும் இலங்கையில் சமூக வலைத்தளங்களுக்கும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எரிகாயங்களுடன் வீட்டிற்கு முன் சடலம்!

ஹொரண பகுதியில் நபர் ஒருவர் தனது வீட்டிற்கு முன்னால் எரிகாயங்களுடன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக ஹொரண பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரண, வேவல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய அஜித் பிரியந்த எனும் நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் அஞ்சலிகள்



மண்ணில்
25
-
11
-
1955

விண்ணில்
06
-
05
-
2019

யா/டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருந்தவபாலன் அவர்களின் துணைவியும்
டிறிபேர்க்கின் ஆசிரியையாய் இருந்து ஓய்வுநிலை கண்டவருமான அமரர் சாந்தினி அருந்தவபாலன்
அவர்களுக்கு எமது *இதய அஞ்சலிகள்*

## அமரர் சாந்தினி அருந்தவபாலன்

டிறிபேர்க் தாயின் மடியில் தவழ்ந்து
கற்றுத் தேர்ந்து ஆசிரியை ஆகி
ஓய்வுகாலத்தின் முன் அங்கேயே கற்பித்து
அமரத்துவம் அடைந்துள்ள எங்கள் அன்னையே!
எங்கள் குருவாய்ப் போதனை தந்தீர்கள்
எங்களின் ஒழுக்கத்தில் கவனமாய் இருந்தீர்கள்
எங்களோடு இனியவை பகிர்ந்தீர்கள்
இன்றெம்மை விட்டு எங்குதான் போனீர்கள்?
காலக்கொடுமையால் கலங்குகின்றோம் அம்மா!
கடவுளுடன் கலந்தாலும் ஆசி மழை பொழியுங்கள்
உங்களின் ஆசிக்காய் ஏங்கித் தவமிருப்போம்
உங்களின் அமைதிக்காய் என்றென்றும் பிரார்த்திப்போம்

யா/டிறிபேர்க் கல்லூரி,
சாவகச்சேரி.

*பிரார்த்தித்து நிற்பவர்கள்*
பழைய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலவர பூமியில் கர்தினால்!

## இஸ்லாமியத் தலைவர்களுடன் சந்திப்பு





(கொழும்பு)

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நீர்கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற பதற்றமான சூழ்நிலையை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நீர்கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு தரப்பினரிடையே மோதல் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இதன்போது சில வாகனங்கள் எரியூட்டப்பட்டிருந்ததுடன், பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடி படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

அத்துடன், பதற்றமான சூழ்நிலையையடுத்து நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் நேற்றுக்காலை 7 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தற்போது விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கலவரம் இடம்பெற்ற பகுதிக்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்றுத் திங்கட்கிழமை காலை விஜயம் செய்துள்ளார்.

அங்கு சென்ற பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இஸ்லாமிய மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேசியுள்ளார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L, London<br>எதிர்பார்ப்பு: UK PR உள்ள பெண்.<br>தொ.இ: B/9638 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 41 ¾செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Professional Qualified<br>தொ.இ: G/9690 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 28 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Business Management - London<br>எதிர்பார்ப்பு: A/L,அரசஉத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: B/9640 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 3<br>கி.பா: 11<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:A/L ஆளணி உத்தியோகத்தர் - வங்கி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/9693 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 3<br>கி.பா: 21செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிஆசிரியர்,Engineer<br>தொ.இ: B/9645 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 14 ¼<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L, Following CBF, Bank<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, QS<br>தொ.இ: G/9699 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA, MBA,Accountant - UK PR<br>எதிர்பார்ப்பு:B.Sc,BAபட்டதாரி,ஆங்கில தகைமை<br>தொ.இ: B/9646 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 1<br>கி.பா: 27 ½<br>உயரம்: 171cm<br>தகைமை/தொழில்:B.Sc, Dental Surgeon<br>எதிர்பார்ப்பு: MBBS Doctor, Dental Surgeon<br>தொ.இ: G/9700 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி- மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீமஹா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இரவு 7 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் 9 ஆம் திகதி சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் கந்த சத்தியதாசன் "நீலமேனி வலிழை பாகத்தொருவன்", 10 ஆம் திகதி இளம் சைவப்புலவர் ஆன்மீகத் திலகம் க.கைலநாதன் "லட்சுமி கடாட்சம்", 11 ஆம் திகதி சைவப் புலவர் திருவாவடுதுறை ஆதீனப் புலவர் ஏ.அனுசாந்தன் "அறம் செய்யும் அன்னை", 12 ஆம் திகதி சைவ சின்மயர் சிவநெறிச் செம்மல் கா.ஈஸ்வரன் "இயற்கையை போற்றுவோம்" ,13 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் சைவ சின்மயர் நித்தியபாபுதரன் "கலை வடிவானவள்" ,14 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவப் புலவர் ச.முகுந்தன் "வானந்து அணாங்கு அருங்கடவுள்", 15 ஆம் திகதி சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் பொன் சந்திரவேல் "அம்பிகையின் திருவருள்" ,16 ஆம் திகதி இளம் சைவப்புலவர் சைவ சின்மயர் க.கைலவாசன் "பஞ்சகௌவியம்", 17ஆம் திகதி இளம் சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் த.மனோஜ்குமார் "பஞ்ச கன்னியர்" போன்ற தலைப்புக்களில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

குறிப்பு - சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு, பரிசில் வழங்கப்படும். (இ-7)

"ஐ.எஸ்.ஐ.எஸ்.என்று அடையாளப்படுத்தி"

# வலி.தெற்குப் பிரதேச சபைக்கு வந்த மர்மத் தொலைபேசி அழைப்பால் பரபரப்பு

## பாதுகாப்புடன் நடைபெற்ற கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச சபைக்கு நேற்றுக்காலை வந்த மர்மத் தொலைபேசி அழைப்பால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த பிரதேச சபையால் சகல வட்டாரங்களிலும் முன்னெடுக்கப்பட்ட மக்கள் தெரிவுடனான வேலைத்திட்டத்தின் இறுதிக் கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற ஏற்பாடாயிருந்தது.

இந் நிலையில் பிரதேச சபை நிர்வாக அதிகாரி ஒருவரின் அலுவலக தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய மர்ம நபர் ஒருவர் தான் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பைச் சேர்ந்தவர் எனவும் குறித்த கூட்டத்தை நடத்த வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளான்.

அது மட்டுமல்லாது தனது நோக்கம் அதிகாரிகளை தாக்குவதில்லை எனவும் உறுப்பினர்களே தனது இலக்கெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளான்.

இது தொடர்பில் தவிசாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் பிரதேச சபை வளாகத்தை சோதனை செய்ததுடன் உரிய பாதுகாப்புடன் கூட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. (இ-10)

## மாணவத் தலைவர்களின் கைதுக்கு மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தேடுதலின் போது இராணுவத்தினர் கைதுசெய்து பொலிஸார் ஊடாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இக் கைது மற்றும் தடுத்து வைத்திருத்தல்களை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என அக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், இச்செயல் பல்கலைக்கழக மாணவர்களை அவர்களது கடந்த காலச் செயற்பாடுகளுக்காகப் பழிவாங்கும் அதேநேரம், எதிர்காலச் செயற்பாடுகளுக்காக அச்சுறுத்தும் உள்நோக்கங்களை உடையதாகும்.

இத்தகைய இராணுவ, பொலிஸ் நடவடிக்கையானது, அவசர காலச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக ஒடுக்குமுறை நடவடிக்கைகள் மீண்டும் கட்டவிழ்த்து விடப்படுகிறதா? எனும் கேள்வியைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த நாற்பது வருடங்களாக நாட்டு மக்களுக்கு எதிரானதாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றப்போவதாகவும் அதற்கு மாற்றான புதிய சட்டமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வரப்போவதாகவும் கூறிவரும் அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவத் தலைவர்களைத் தடுத்து வைத்திருப்பது சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

புலிகள் இயக்கத்தின் தலைவரினதும் ஏனையோரதும் பழைய படங்களை வைத்திருந்ததாகக் கூறிக் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பது அற்பத்தனமான காரணமே அன்றி, பழிவாங்குதலும் அச்சுறுத்தலுமே அடிப்படை நோக்கங்களாகும்.

அரசாங்கத்தின் இச் செயலை அனைவரும் இணைந்து கண்டிக்கவேண்டும் என அழைப்பு விடுப்பதுடன், அம் மாணவர்கள் விரைவாக விடுதலை செய்யப் படவேண்டும் எனவும் எமது கட்சி வலியுறுத்துகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## வருடாந்த மஹோற்சவப் பெருவிழா

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் 44 ஆவது ஆண்டு வசந்த வைகாசி வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 12 நாட்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் முற்பகல் 10 மணியளவில் பூரணைத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-5)

## உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி



(சாவகச்சேரி)

கடந்த மாதம் 21 ஆம் திகதி நாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உயிர் நீத்தவர்களுக்கு சாவகச்சேரி நகரசபையில் நேற்றுத் திங்கட்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது.

உப தவிசாளர் பாலமயூரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி அடையவும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமாகவும் பிரார்த்திக்கப்பட்டது.

இதில் சபையின் செயலாளர் சபேசன், சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (இ-30)

## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத சூரி | சந் | ராகு செவ் |
| | கிரகநிலை | | |
| | | | |
| சனி, குரு, கேது | | | |

சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை

**07.05.2019**

சித்திரை 24, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திருதியை பின்னிரவு 2.56 மணிவரை
ரோகினி பிற்பகல் 5.09 மணிவரை
சுபநேரம் 10.25 - 11.55 மணிவரை
இராகுகாலம் 2.55 - 4.25 மணிவரை
றம்ழான் மாத ஆரம்பம்,
அட்சய திருதியை, அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** எந்தவொரு வேலையையும் நாளை எனத்தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** யாராவது உங்களிடம் உதவி கேட்டு வரலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வை அவசியம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயனக்குறைவான நாள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், போசன சுகமுண்டு.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கும் நாள், நீங்கள் தேடிச் சென்றவர்கள் உங்களை நாடி வரலாம், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் தடங்கல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், மறைமுக போட்டிகள் மாறும், உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல்கள் ஆச்சரியப்பட வைக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “மாணவர்களை கொல்வோம்”

# கல்லூரிக்கு மிரட்டல் கடிதத்தில் படம் இளைஞனிடம் பொலிஸார் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட பயங்கரவாத அமைப்பின் பெயரிலான மிரட்டல் கடிதத்திலுள்ள படத்தில் காணப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே நேற்று முன்தினம் இரவு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

தனது முகநூலிலுள்ள படங்களை எடுத்து எவரோ ஒருவர் தனக்கு எதிராக இந்த வேலையைச் செய்துள்ளார் என்று சந்தேக நபர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

தேசிய தௌஹீத் ஜமாத் - யாழ். மாவட்டம் என்று பெயரிடப்பட்டு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தத் தேசம் அல்லாவின் தேசம். இங்கு இஸ்லாமிய மக்கள் மட்டுமே வாழ முடியும். இது எமக்கான புனித பூமி. இங்கு வேறு யாரும் வாழ முடியாது. வாழ விடவும் மாட்டோம்.

புதன்கிழமை (8.5.19) பாடசாலையில் குண்டு வைப்போம். மாணவர்களையும் கொல்லுவோம். அல்லா மேல் ஆணை. எல்லாப் பாடசாலைகளுக்கும் குண்டு வைக்க ஜிகாதிகள் வந்துள்ளோம்.

முகமது உமர் றியாஸ் (பிரதீப்) தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு - யாழ்.மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-101)


பழமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

### அமரர்.சண்முகக் குருக்கள் கமலபூரணம்

28.04.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த சண்முகக் குருக்கள் கமலபூரணம் அம்மா அவர்களின் பாஷான உத்வாசம் ஏகோ திட்டம் சபிண்டீகரணமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மேலைப்புலோலி முடிக் கொற்றாவத்தை சித்தி விநாயகர் ஆலயத்தில் 08.05.2019 புதன்கிழமை காலை நடைபெறும். அனைவரும் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

அன்னார் மயில்வாகனம் குருக்கள் சண்முகக்குருக்களினதும் சௌந்தர நாயகியினதும் மகளும் சிவாச்சாரிய பீடாதிபதி, தேசமானி வேத ஆகமசமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ வேதாரணியக்குருக்கள் சௌந்தர நாயகி அம்மா, இராசேஸ்வரி அம்மா, சாரங்கநாயகி அம்மா ஆகியோரின் சகோதரியும் சிவகாம வல்லியின் தாயும் சுந்தரலிங்கம் குருக்களின் மைத்துனியும் ஆறுமுகத்தின் மாமியாரும் பத்ம பிரியாவின் பேர்த்தியுமாவார்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீணாகான விபூசனி சமேத வேதாரணியேஸ்வரப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். அவர் பிரிவால் துயருறும் இனத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.**

(6695)

சிவஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள் தேசமானி
ஓய்வுநிலை அதிபர், செயலாளர்
(அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை).


# SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

E Green Lanka

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

25 YEARS WARRANTY



| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

மின்சார தடை இல்லை
No Power-Cut




விவசாயிகளுக்கான மின்சாரம்




SOLAR STREET GARDEN LIGHTS




7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

* நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO Fronius SOLAX POWER ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

CEB SEA LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

TIPS!!!
*Factors affecting performance of a solar PV system!*
Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*Factors which are beyond the control of Human efforts:*
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் சோதனைக்கு மத்தியில் பாடசாலைகள் நேற்று ஆரம்பம்




உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலின் பின்னர் இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட திகதி மேலும் இரு தடவைகள் மாற்றம் செய்யப்பட்டு தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்கள் நேற்றைய தினம் ஆரம்பித்தன. வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நேற்றைய தினம் பாடசாலைக்கு வருகை தந்திருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும், பாடசாலைகளில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு குழு,பொலிஸ் மற்றும் படைத்தரப்பால் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் மிகுந்த சிரமத்தின் மத்தியில் மாணவர்கள் தமது கற்றல் உபகரணங்களை எடுத்து வரும் காட்சிகளை காணக்கூடியதாக இருந்தது. (9-250-285-281-312)

## ஜனநாயக போராட்டங்களை முடக்கவே பல்கலை.மாணவர்களை கைது செய்துள்ளார்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கண்டனம்

(குருமன்காடு)

**தமிழர்களுக்கான ஜனநாயக போராட்டங்களையும் நிகழ்வுகளையும் முன்னெடுக்காது அவர்களின் பங்குபற்றலை குறைப்பதை பின்னணியாகக் கொண்டே யாழ்.பல்கலைக்கழக மாணவர்களது கைது இடம்பெற்றுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**



யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் ஐவருக்கு ஒருவர் என்ற வகையில் படையினர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள். யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைது நடவடிக்கையைப் பார்க்கின்றபோது அற்பசொற்ப காரணங்களைக் காட்டி கைது செய்வதே படையினரின் நோக்கமாக இருக்கின்றது.

அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் தமிழினத்தின் உரிமைகளுக்காகவும் மற்றும் நீதிக்காகவும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்ற போராட்டத்தில் இதய சுத்தியுடன் பங்கேற்று வருகின்றார்கள். இவ்வாறு மாணவர்கள் இனம் சார்ந்து செயற்படுவதானது தமிழ் மக்களின் ஆணை பெற்றவர்கள் என்று மார் தட்டிக்கொண்டு, அடிப்படைக் கோட்பாடுகளை கைவிட்டு, கொள்கை விலகி, கம்பெரலியவுக்குள் கட்டுப்பட்டு நின்று கொண்டிருப்பவர்களுக்கும், ஆட்சியில் அமர்ந்து அரசியல் சுகபோகத்தினை அனுபவித்து வருபவர்களுக்கும் தலையிடியாக இருக்கின்றது.

1979 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு தமிழ் தலைமைகள் மௌனமாக இருந்ததன் விளைவு ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படவும் படுகொலை செய்யப்படவும் காரணமாகவும் இருந்தார்கள். அதே போன்று தற்போதைய அரசாங்கத்தினால் அமுல்படுத்த இருக்கும் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்திற்கும் மௌனமாக இருந்து ஆதரவு அளித்து வருகின்றார்கள். இவ்விடயம் தமிழ் மக்களின் முதுகெலும்பாக இருக்க கூடிய யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் கைது வரையும் கொண்டு சென்றிருக்கின்றது.

யுத்த காலத்தில் ஏற்பட்ட தமிழ் மக்களினுடைய உயிர் மற்றும் சொத்தழிவுகளை திட்டமிட்டு அரசு ஏற்படுத்திவிட்டு தற்போது கல்வியிலும் கைவைப்பதற்கும் வழிவகுத்து விட்டிருக்கின்றனர்.

வலுவான காரணம் இன்றி கைதுசெய்யப்பட்ட மாணவர் சங்கப் பிரதிநிதிகளை படைத்தரப்பின் பிடியிலிருந்து உரிய அரசியல் அழுத்தத்தைக் கொடுத்து விடுவித்திருக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் சட்டரீதியாக அனுக முற்பட்டிருப்பதும் மாணவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்புவதற்கான சதித்திட்டமாகவே பார்க்க முடிகிறது.

அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அவசரகால சட்டத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கைதானது மிலேச்சத்தனமானதும் கண்டனத்திற்குரியதுமாகும்.

அரசியல் உள்நோக்கங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை நிபந்தனையின்றி விடுவிக்காவிடில் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பல்கலைக்கழக மாணவர்களும் பொது அமைப்புகளும், சர்வமத தலைவர்களும், ஜனநாயக் முற்போக்கு அரசியல் சக்திகளும் இணைந்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். எனவே அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு அப்பாவி பல்கலைக்கழக தமிழ் மாணவர்களை தாமதமின்றி விடுதலை செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்துள்ளார். (9-250)




## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு

கம்பரெலிய ஊரெழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் 200 மில்லியன் ரூபா விசேட ஒதுக்கீட்டின் கீழ் கம்பரெலிய ஊரெழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமிய வீதிகள், ஆலயங்கள், பாடசாலைகள், மைதானங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம், மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றன.

கம்பரெலிய ஊரெழுச்சிவேலைத் திட்டத்தின் மூலம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 38 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடர் குண்டுத்தாக்குதல் எதிரொலி

# 200 இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் உட்பட 600 வெளிநாட்டவர்கள் வெளியேற்றம்!

## அமைச்சர் வஜிர தகவல்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் 200 இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் உட்பட 600 வெளிநாட்டவர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மதகுருமார்கள் இலங்கைக்கு சட்டரீதியாக வந்துள்ளபோதும் தாக்குதல்களின் பின்னரான பாதுகாப்புச் சூழலால் அவர்கள் விசா காலம் முடிவடைந்த பின்னரும் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அவர்களிடம் உரிய தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதாக உள்விவகார அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

"நாட்டில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு விசா நடைமுறையை இறுக்கியிருப்பதுடன், மத ரீதியான போதகர்களுக்கு வழங்கும் விசாவை மட்டுப்படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளோம்" என அவர் தெரிவித்தார். "நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் 200 பேர் இஸ்லாமிய அறிஞர்களாவர்" எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதை அமைச்சர் வெளிப்படுத்தாதபோதும், பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா காலம் முடிவடைந்த பின்னரும் தங்கியிருந்த நிலையில் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"நாட்டில் உள்ள பல மத நிறுவனங்கள் நீண்டகாலமாக வெளிநாட்டிலிருந்து மத போதகர்களை அழைத்துவருகின்றன. அவை தொடர்பில் நாம் தற்பொழுது கவனம் செலுத்தியுள்ளோம்" என்றார். நாட்டுக்கு வரும் வெளிநாட்டு மதகுருமார் உள்ளூரில் உள்ளவர்களுக்கு அடிப்படைவாதக் கருத்துக்களைப் புகட்டி ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் போன்ற தாக்குதல்களை நடத்தத் தூண்டலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்குக் காணப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-7)

## பாடசாலைக்கு அருகில் வெடி மருந்துகள் மீட்பு





(கொட்டகலை)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்ட கொட்டகலை ஸ்ரீ பெரகும் சிங்கள வித்தியாலயத்திற்கு அருகில் சுமார் ஒரு கிலோவிற்கு அதிகமான வெடி மருந்துகள் பாதுகாப்புப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலையின் வளாகப் பகுதிகளை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் பொது மக்கள் ஈடுபட்டிருந்த போது அங்கு குப்பை கூழங்கள் நிறைந்துள்ள ஒரு பகுதியில் பை ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் இந்த வெடி மருந்துகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.


கல் உடைப்பதற்காக பாவிக்கப்படும் வெடி மருந்துகள் என பாதுகாப்பு பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள போது குறித்த சிங்கள வித்தியாலயத்தின் வளாகப் பகுதிகள் அப்பாடசாலையின் மாணவர்களின் பெற்றோர்களால் சுத்தப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது குப்பை கூழத்தில் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று இருப்பதைக் கண்டு பெற்றோர்கள் உடனடியாக பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதன்போது ஸ்தலத்திற்கு விரைந்த பாதுகாப்புப் பிரிவினர் பொதியை மீட்டு பார்வையிட்ட போது அதில் கல் உடைக்கப் பயன்படுத்தும் வெடி மருந்துகளே இருப்பதாகவும், இப்பகுதியில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எவரேனும் இதை தூக்கி எறிந்துவிட்டு சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்கு பல்கலையிலும் கடும் சோதனை



கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழத்தில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் கிழக்கு பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதியிலும் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்குதல்களை தொடர்ந்து நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நிலவிவருவதுடன் மக்களும் பீதியடைந்துள்ளனர்.

இந்நிலையில், மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் பொலிஸார், இராணுவம் என பாதுகாப்புப் படையினர் நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## நீர்கொழும்பில் இடம்பெற்றது இன மோதலல்ல; இருவருக்கிடையிலான தனிப்பட்ட பிரச்சினை!

### சந்தேகத்தில் இருவர் கைது - ருவான் தகவல்





நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போரதொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட குழு மோதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர, மதுபோதையில் இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு குழு மோதலாக மாறியுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ என்பவற்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பாதசாரிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் அவை பாரியளவில் மேற்கொள்ளப்படவில்லை. எவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை. அத்தோடு இந்த முரண்பாடுகளில் கூரிய ஆயுதங்கள் எவையும் பயன்படுத்தப்படவில்லை என்பது விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் பொலிஸார் மற்றும் முப்படையினர் இணைந்து நீர்கொழும்பு - கொச்சிக்கடை - போரதொட பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கைககளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் மற்றும் முப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான சோதனை நடவடிக்கைகளின் புலனாகவே இவ்வாறு ஆயுதங்கள் பயன்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சோதனை நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மோதல் குறித்து தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் கொச்சிக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸார் விரைந்து செயற்பட்டு முரண்பாடுகள் தீவிரமடையாமல் தடுத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளம் பெருக்கும் அட்சய திருதியை

சித்திரை மாதம் அமாவாசையை அடுத்த மூன்றாம் நாள் வரும் (வளர்பிறை) திருதியை திருநாளை அட்சய திருதியையாகக் கொண்டாடுகிறோம். பிரம்மதேவன், உலகை சிருஷ்டியை ஆரம்பித்ததாக புராணங்கள் போற்றும் இந்தத் திருநாளின் ஆன்மீகச் சிறப்புகள் ஏராளம்!

பிச்சாடனரான ஈஸ்வரன், அன்னபூரணியிடம் பிச்சை பெற்ற திருநாள் அட்சயதிருதியை.

ஐஸ்வர்ய லட்சுமி, தான்ய லட்சுமி போன்ற திருமகளின் அவதாரங்கள் நிகழ்ந்த தினமும் இதுவே.

பராசக்தியின் அம்சமான சாகம்பரிதேவி, பல அரிய மருத்துவ மூலிகை விருட்சங்களை உருவாக்கிய நாள் அட்சய திருதியை.

குபேர மூர்த்தி ஐஸ்வர்ய நிதிக் கலசங்களைப் பெற்றதும் இந்தத் திருநாளில்தான்.

அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தை சூரிய பகவானிடம் இருந்து பாண்டவர்கள் பெற்றதும் இந்த நாளில்தான்.

திரௌபதியின் மானத்தைக் காக்க வந்த கிருஷ்ண பரமாத்மா, "அட்சய" என்றருளிபுடைவை அளிக்க... அது, முடிவில்லாமல் வளர்ந்து கொண்டே போனது. ஒரு அட்சய திருதியை அன்றுதான் இந்த சம்பவமும் நிகழ்ந்தது.

மஹாளய அமாவாசை போலவே அட்சய திருதியை அன்றும் பித்ரு வழிபாடு செய்தல் சிறப்பு.

நாம் பித்ருக்களுக்கு (முன்னோருக்கு) செய்யும் தர்ப்பணத்தை அவர்களிடம் சேர்ப்பவர் சூரிய பகவான். அட்சய திருதியை திருநாளில் இவர் மிகுந்த ஒளியுடன் பிரகாசிப்பார்.

எனவே, இந்த நாளில் செய்யப்படும் பித்ரு கடன்கள், முதல் தலைமுறை பித்ருக்களுக்கு மட்டுமன்றி, அதற்கும் முந்தைய தலைமுறையினருக்கும் போய்ச் சேரும் என்பது ஐதீகம்.

காசி, திருப்பரங்குன்றம், திருச்சோற்றுத்துறை, விளங்குளம் மற்றும் முழையூர் ஆகிய தலங்களில் அட்சய திருதியை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இவற்றுள் கும்பகோணம்-பட்டீஸ்வரம் அருகில் உள்ள முழையூர் பரசுநாதர் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

ஜமதக்னி மகரிஷி தவம் இருந்து பரசுராமரை மகனாகப் பெற்றதுடன், அவர், தம் மகனுக்கு மறைஞானமும் நல் வரங்களும் பெற்றுத் தந்த திருத்தலம் இது என்பர்.



முற்காலத்தில் இங்கு, பிரமாண்டமான தேர்கள் உலா வர... அட்சய திருதியை திருநாள் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதாம். தற்போதும் இந்த புண்ணிய தினத்தில் ஆயிரக்கணக்கானோர் இங்கு கூடுகின்றனர்.

பரசு பீஜாட்சர லிங்க வடிவாகத் திகழும் இங்குள்ள சிவனாருக்கு, அட்சய திருதியை அன்று காசு மணிகளால் ஆன மாலை அணிவித்து, அபிஷேக-ஆராதனைகளுடன், குபேர பூஜை செய்வதால் ஐஸ்வர்யம் பெருகும் என்பது ஐதீகம்.

முடங்கிக் கிடக்கும் பணம், பாழடைந்த வீடு மற்றும் தரிசு நிலம் போன்றவை விருத்தியடைய, இங்குள்ள இறைவனுக்கு மாதுளை முத்துகளால் காப்பிட்டு அலங்கரித்து அபிஷேக- ஆராதனைகள் செய்து வணங்கி வர வேண்டும்.

**"கோதுமை பண்டத்தை தானம் செய்யுங்கள்!"**

அட்சய திருதியை அன்று அன்னதானம் செய்வதால், இறைவனுக்கே அன்னமிட்ட பலன் கிட்டும், குடும்பத்தில் வறுமை நீங்கும். தவிர, அன்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்த பின், பசுக்களுக்கு வாழைப் பழம் கொடுப்பது சிறப்பு. அட்சய திருதியை நாளில் இறைவனுக்குப் படைத்து உண்ணும் பிரசாதம் மிகச் சிறந்ததாகும். அன்று, "இறைவா! உண்டு மகிழ்வாயாக!" என்ற பிரார்த்தனையுடன் படைக்கப்படும் நைவேத்தியங்களை ஏற்று இறைவன் நம்மை ஆசீர்வதிப்பதாக ஐதீகம்.



கோதுமையின் வடிவிலுள்ள ஒரு தானியமே "யவை". பூஜைப் பொருட்கள் விற்கும் பெரும்பாலான கடைகளில் கிடைக்கும். அட்சய திருதியை அன்று லட்சுமி சமேத நாராயணருக்கு துளசியுடன் "யவை"யையும் படைத்து வழிபட வேண்டும். தவிர, கோதுமையில் தயாரித்த இனிப்புப் பண்டங்களையும் படைக்கலாம். இந்த நாளில்அந்தணர்களுக்கு "யவை" தானியமும், ஏழைக் குழந்தைகளுக்கு இனிப்பு பலகாரங்களும் கொடுப்பது நலம் தரும்.

# ஒரு சிறு குழுவால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் குற்றவாளிக் கூண்டில்

## முஜிபுர் ரஹ்மான் கவலை

(கொழும்பு)

**முஸ்லிம்களுக்குள் ஒழிந்திருந்த சிறிய பயங்கரவாதக் குழுவால் ஒட்டு மொத்த முஸ்லிம்களும் இன்று பாதிப் புக்குள்ளாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கவலை வெளியிட்டுள்ளார்.**

இன்று நாட்டில் முழு முஸ்லிம் சமூகத்தினரையும் குற்றவாளிகளாகப் பார்க்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, அந்தத் தீவிரவாதக் குழுவை அடியோடு அழிக்க



வேண்டும். நமது சமூகங்களைப் பிளவு படுத்துவதே அந்தத் தீவிரவாதக் குழுக்களின் நோக்கமாக இருந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.


அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளன.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தீர்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-5)



# ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் அறிவுரை

(கொழும்பு)

ஊடகங்கள் பொறுப்புணர்வுடன் செய்திகளை வெளியிட வேண்டும் எனவும், சமூக மட்டத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையிலும், அப்பாவி முஸ்லிம்களை குற்றமிழைத்தவர்களாக காட்ட முற்படும் வகையில் செய்திகளை வெளியிடக் கூடாது எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் தீவிர தேடுதல் வேட்டை காரணமாக பல பொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இத்தேடுதல் வேட்டைகளின் போது சில ஊடகங்கள் நேரடியாக அழைத்துச் செல்லப்படுகின்றன எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முழு முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளிகளாக காட்டும் வகையில் சில பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. பொறுப்புணர்வுடன் மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

தீவிரவாதத்தையும், அடிப்படை வாதத்தையும் அடியோடு ஒழிக்க முஸ்லிம் சமூகம் தனது முழுமையான ஒத்துழைப்பை பாதுகாப்புத்துறைக்கு வழங்கும்.

முஸ்லிம்களின் துளியளவும் ஆதரவில்லாத ஒரு சிறிய தரப்பே இந்த பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதற்காக ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளிகளை போன்று சித்திரிப்பதை அனுமதிக்க முடியாது.

ஊடகங்களின் இத்தகைய நடவடிக்கைகளால் மேலும் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும் எனவும் ஊடகங்களும், அரசியல்வாதிகளும், பாதுகாப்புத் துறையினரும் இதுகுறித்து உன்னிப்பாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சமூகத்தை ஒடுக்குவது

## ஒட்டுமொத்த சமூகத்தையும் அச்சுறுத்தும் செயல்

### சாந்தி எம்.பி.தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை என்பது தமிழ் மக்கள் மீதான மீண்டுமொரு அடக்குமுறை என்ற கண்ணோட்டத்திலேயே நாங்கள் நோக்க வேண்டி இருக்கின்றது. ஒரு கல்விச் சமூகத்தை அடக்கி ஒடுக்குவது என்பது ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒடுக்குவதற்கும் அச்சுறுத்துவதற்கும் சமனானது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் மாங்குளத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக நன்கு அவதானிக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

குண்டு வெடிப்பின் பின்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் சரியான முறையில் பயன்படுத்தப் படுகிறதா? செயற்படுத்தப்படுகிறதா? என்ற ஒரு அச்சத்தையும் கேள்வியையும் வட பகுதியில் தற்போது மக்களிடம் ஏற்படுத்தி இருக்கின்றது. இந்த நிலையை உறுதிப்படுத்தும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பின் பின்புதான் தலைவர் பிரபாகரனுடைய போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய போராட்டத்தின் நியாயத் தன்மையை, நீதித் தன்மையை அனைத்து சிங்கள அரசியல் தலைமைகளும் புகழ்கிறார்கள், பாராட்டுகிறார்கள். இந்த நிலையில் தலைவர் பிரபாகரனுடைய புகைப்படத்தை வைத்திருந்தது ஒரு குற்றமா? வடக்கு-கிழக்கை பொறுத்தளவில் திறமைகள் கல்வி கற்கின்ற ஒரு பிள்ளையைக்கூட பிரபாகரனுடைய படத்தைக் காட்டி இது யார் எனக் கேட்டால் அந்தப் பிள்ளை உடனே கூறிவிடும். அப்படியாயின் அந்தப் பிள்ளை பயங்கரவாதியா? அது கைது செய்யப்பட வேண்டியது இல்லையா செய்யப்பட வேண்டிய பிள்ளையா? அது மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகளது இந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்துகின்ற வகையில் இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை என்பது தமிழ் மக்கள் மீதான மீண்டுமொரு அடக்குமுறை என்ற கண்ணோட்டத்திலேயே நாங்கள் நோக்க வேண்டி இருக்கின்றது.

இதேநேரத்தில் அண்மையில் சபாநாயகர் கடிதம் மூலமும் குறுந்தகவல்கள் மூலமும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான செய்திகளை அனுப்பி வைத்திருக்கின்றார்கள். பாராளுமன்றத்திற்குள் உட்புகும் போது உறுப்பினர்களது வாகனங்கள், அவர்கள் உடல் பரிசோதனை என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஊடகங்கள் வாயிலாக நான் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் ஒரு செய்தியை விடுக்க விரும்புகின்றேன். தனியே பாராளுமன்றத்திற்குள் உட்புகும் போது மாத்திரமன்றி இந்த தெரு நீளத்தில் எங்கெங்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் சோதனை செய்யப் படுகிறார்களோ அதேபோன்று இந்த மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அவர்களது வாகனங்களும் அந்தச் சோதனை சாவடிகளிலும் சோதனையிட வேண்டும் என கூற விரும்புகிறேன். ஏனெனில் நாட்டில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னணியில் அரசியல்வாதிகள் இருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது நிலவி வருகின்றது. அந்த வகையிலே இந்த அரசியல்வாதிகளையும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்தார். (9-281)




# கஞ்சா கடத்திய இருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்கரை பகுதியில் படகுமூலம் கஞ்சா கடத்த முற்பட்ட நபர்களில் இருவரை முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், முல்லைத்தீவிற்கு கடல்வழியாக கஞ்சா கடத்தல் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட பெருங் குற்றப்பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய பெருங்குற்றப் பிரிவு பொலிஸ் அதிகாரி ஜ.பி.கெங்காநாத் தலைமையில், சுரேன்றாச், ஹரிச, சஞ்சீவன் தர்சன ஆகிய பொலிஸார் தீர்த்தக்கரைப்பகுதியில் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டிருந்தனர்.

படகு ஒன்று கரையடைந்துள்ளமையை இனம்கண்டு அந்த இடத்திற்கு சென்றபோது அதில் வந்து இறங்கிய நால்வரில் இருவர் தப்பி ஓடிய நிலையில் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் கள்ளப்பாடு தெற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களிடம் இருந்து ஒரு தொகுதி கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் நீதவான் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்திய போது. அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர்விட்டுள்ளார். (9-281)

## கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 25 இலட்சம் ரூபாய் நிதியில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார். கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் நாகராசா நகுலராஜா, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(9)

## போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவி

கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் மனித உரிமை செயற்பாட்டாளரான கீத் குலசேகரத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரமந்தனாறு 40 ஆம் வாய்க்காலை சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட இராமர் என்பவருடைய குடும்பத்தின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் சிறிய கடை ஒன்றும் வியாபாரத்துக்கான முதலீடு என்பன வழங்கி வைத்துள்ளார். மேலும் இயக்கச்சி சங்கத்தர் வயலை சேர்ந்தவரும் போரின் போது கணவரை இழந்த தர்சிகா சத்தியரூபனின் இரு பிள்ளைகளுடைய கல்விச் செயற்பாடுகளுக்கான மாதாந்த செலவுகளைப் பொறுப்பெடுத்துள்ளார். (9)

# கூட்டுறவுச்சங்கங்களின் இயல் தகைமை தொடர்பில் கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய இயல் தகைமை குறித்து கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்த காலப்பகுதியில் மக்களுக்கான சேவைகளை வழங்கி வந்த பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

இவற்றை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்கள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டாலும் அவை செயற்றிறன் அற்றுக் காணப்பட்டன.

இந்த நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களை வலுப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் தற்போதைய இயல் தகைமை குறித்து கலந்துரையாடல் ஒன்றை பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணை த்தலைவருமான சி.சிறீதரனால் விரைவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கலந்துரையாடலின் போது சங்கங்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் கடன்கள் சேவைகள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், தேவைப்பாடுகள், எதிர்பார்ப்புக்கள், நிவர்த்தி செய்யவேண்டிய குறைபாடுகள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களை தயார் செய்யுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9)

## இரத்ததான நிகழ்வு

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி கிளையினால் இன்று 7 ஆம் திகதி இரத்ததான நிகழ்வு கிளிநொச்சி பளை வைத்தியசாலையிலும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் குருதிக் கொடை அளிக்கும் அனைவரையும் கலந்து சிறப்பித்துக் கொள்ளுமாறு கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு 077 678 5060 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-285)

# மன்னாரில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடி

## தடுத்து நிறுத்துமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பகுதியில் கடல் வளங்களைப் பாதிக்கும் வகையிலும் மீன் வளத்தை குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான மக்கள் மீன்பிடி மற்றும் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். அதேபோன்று தீவகத்திற்கு அப்பால் உள்ள வங்காலை தொடக்கம் சிலாவத்துறை முள்ளிக்குளம் வரையிலும் விடத்தல் தீவு தேவன்பிட்டி வெள்ளாங்குளம் பகுதி வரையிலும் உள்ள கரையோரப்பகுதிகளிலும் பெரும்பாலும் மக்கள் மீன்பிடியையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அண்மைக் காலமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக சுருக்குவலை, டயனமற், தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல், சட்டவிரோதமாக சங்கு அகழ்வுகளில் ஈடுபடல், கட்டுவலை, நிபந்தனைகளை மீறி மீன் பிடித்தல், றோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகள் மன்னார் கடல் பகுதிகளில் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் கடந்த 2015-2017 ஆம் ஆண்டுகளில் மன்னார் கடல் எல்லை பகுதிக்குள் சட்டவிரோதமாக டயனமற் வெடி பொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாக 65 மீனவர்களும் தங்கூசி வலை மற்றும் சுருக்கு வலைகளை, ஏனைய தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாக 115 மீனவர்களும் சட்டவிரோதமாக றோலர் படகின் மூலம் மீன்பிடியில் ஈடுபட்டதாக தலைமன்னார், எருக்கலம்பிட்டி கடல் பகுதிகளில் 12 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் ஏராளமானவர்கள் சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுட்டவிரோத மீன்படி எமது எதிர்கால சந்ததிகளுக்கு தேவையான ஒட்டுமொத்த மீன் வளங்களையும் அழித்து விடக்கூடிய மிகப்பாதகமான செயல் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கமும் சில விடயங்களில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. சில அரசியல் வாதிகள் மக்களின் வாக்குகளுக்காக இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி தொழிலுக்கு ஆதரவு வழங்குவதுடன் சில தொழில்களுக்கு அனுமதியும் பெற்றுக்கொடுக்கின்றனர்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகள் வட பகுதியில் நிறுத்தப்பட்டாலே தவிர இங்குள்ள வளங்கள் நாசமாக்கப்படுவதும் சூறையாடப்படுவதையும் யாராலும் தடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.


எல்லா வளங்களையும் இழந்த எம் தமிழ் இனத்திற்கு எஞ்சி இருப்பது இன்னும் சில வளங்களே.க் அவற்றையும் எமது சுகபோக வாழ்கைக்காகவும் அரசியல் ஆதாயத்திற்கும் அழித்து விட்டு உரிமைகாக கையேந்தி நிற்கும் நாம் உயிர் வாழ்க்கைக்கும் கையேந்தும் நிலைக்கு கொண்டு வந்து விடாதீர்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (9-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராஜீவ் காந்தி குறித்து சர்ச்சைக் கருத்து

# போர் முடிந்தது; உங்கள் முன்வினைப் பயன் காத்திருக்கிறது - மோடிக்கு ராகுல் பதிலடி



(சென்னை)

ராஜீவ் காந்தி குறித்து பேசியதற்கு பதிலடி தரும் வகையில், போர் முடிந்தது. உங்களுடைய முன்வினைப் பயன் காத்திருக்கிறது என்று ராகுல் காந்தி டுவிட் செய்துள்ளார்.

பிரதமர் மோடி கடந்த சனிக்கிழமை உத்தரப் பிரதேசத்தில் மேற்கொண்ட பிரசாரத்தின் போது ராகுல் காந்தியின் தந்தையும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியை தாக்கி உரையாற்றினார்.

இதுகுறித்து, பிரதமர் மோடி "உங்களது தந்தை அவரது சேவகர்களால் தூய்மையானவர் ஆனால், அவரது வாழ்க்கை நம்பர் 1 ஊழல்வாதியாக முடிவுற்றது" என்றார். போபர்ஸ் ஊழலை குறிப்பிட்டு பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு பதிலடி தரும் வகையில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) தனது டுவிட்டர் பதிவில் "மோடி ஜி, போர் முடிந்து விட்டது. உங்களுடைய முன்வினைப் பயன் காத்திருக்கிறது. எனது தந்தை குறித்த உங்களுடைய ஆழ்மன நம்பிக்கையை நீங்கள் வெளிப்படுத்துவது உங்களை காப்பாற்றாது. அன்புடன் ராகுல்" என தெரிவித்துள்ளார். (7)

# போனி புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஒடிசா மாநிலத்திற்கு 1000 கோடி ரூபாய் நிதி



(ஒடிசா)

போனி புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஒடிசா மாநிலத்திற்கு 1000 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கவுள்ளதாக பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

போனி புயலினால் கடுமையாக சேதமடைந்துள்ள பூரி மாவட்டத்தினை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திங்கட்கிழமை ஹெலிகொப்டரில் சென்று பார்வையிட்டார்.

குறித்த பகுதிகளைப் பார்வையிட்ட பிரதமர், புயலினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை ஆய்வு செய்த பின் ஒடிசா மாநிலத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இதேவேளை போனி புயல் காரணமாக ஒடிசாவில் 38 பேர் உயிரிழந்துள்ளதுடன், தொடர்ந்தும் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்காவின் இராணுவத் தலையீட்டை கோரவுள்ளதாக ஜுவான் கெய்டோ தெரிவிப்பு



(கராகஸ்)

வெனிசுவெலாவில் அரசியல் நெருக்கடிகள் நீடித்து வருகின்ற நிலையில், நாட்டிற்குள் அமெரிக்காவின் இராணுவத் தலையீட்டை கோரவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ஜுவான் கெய்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றின் போதே வெனிசுவெலா எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த வாரம் இராணுவ எழுச்சியைத் தூண்டிவிட்டு மதுரோவின் ஆட்சியை கவிழ்ப்பதற்கான முயற்சியில் எதிர்க்கட்சி தலைவர் ஈடுபட்டார். ஆனால், அந்த ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே அமெரிக்க இராணுவத்தலையீட்டை கோரவுள்ளதாக கெய்டோ தெரிவித்துள்ளார். (7)

# ஆப்கானிஸ்தானில் இரா...
# இரு தலிபான் தலைவர்க...

ஆப்கானிஸ்தானில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 2 தலிபான் தலைவர்கள் உட்பட 52 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும், அரச படையினருக்கும் இடையே தொடர்ந்து நீண்டகால போர் நீடித்து வருகிறது. பயங்கரவாத குழுக்களை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி ஜனாதிபதி விடுத்த அழைப்பு தோல்வியில் முடிந்தது. ஆனாலும் தலிபான் பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல்கள்



# தரையிறக்கப்பட்ட வி...
# 41 பயணிகள் உடல் க...




(மொஸ்கோ)

**ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்ட விமானத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி அதில் பயணம் செய்த 41 பயணிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.**

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து முர்மன்ஸ்க் கிளம்பிய சுகோய் சுப்பர்ஜெட் 100 விமானம் அவசரமாகத் தரையிறங்கும்

# காஸா எல்லையில் தொடரு...
# இஸ்ரேலின் தாக்குதலில் 2...

(ஜெருசலேம்)

காசா எல்லைப்பகுதியில் இருந்து ரொக்கெட்டுகளை வீசி சரமாரியான தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இஸ்ரேல் கொடுத்த பதிலடிக்கு 5 பேர் உயிரிழந்தனர்.

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான காஸா முனையில் இருந்து இஸ்ரேல் நாட்டின் மீது இங்குள்ள ஹமாஸ் போராளிகள் அவ்வப்போது ரொக்கெட் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக காஸா நகரின் மீது இஸ்ரேல் நாட்டுப் போர் விமானங்களும் குண்டு மழை பொழிவதுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ராணுவத்தினர் தாக்குதல் ...ர்கள் உட்பட 52 பேர் பலி



நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் கஸ்னி மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் பயங்கரவாதிகளை குறிவைத்து நேற்று முன்தினம் இராணுவம் வான் வழி தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் அபு காலித் மற்றும் குமாண்டன் சா்ஹாதி ஆகிய 2 தலிபான் தலைவர்கள் உட்பட 52 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டு உள்ளனர் என இராணுவ அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (7)

## ...ட விமானத்தில் தீ! ...கருகி உயிரிழப்பு




போது ஏற்பட்ட தீவிபத்தில் அந்த விமானத்தில் பயணம் செய்த 41 பேர் பலியாகினர்.

விமான நிலையத்தில் இருந்து விமானம் கிளம்பிய சிறிது நேரத்தில் விமானத்தில் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டு விமானக் கட்டுப்பாட்டு அறையின் உதவியோடு விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

தரையிறங்கி விமானம் ஓடு பாதையில் சென்று கொண் டிருக்கும் போதே திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது. இதையடுத்து விமானத்தின் அவசர வழி மூலமாக பயணி கள் வெளியேற்றப்பட்டனர்.

எனினும் தீ வேகமாக பரவத் தொடங்கியதால், விமானத்தில் பயணம் செய்தவர்களில் 2 குழந்தைகள் உட்பட 41 பேர் பலியாகினர்.

இந்த விபத்து குறித்து விசாரித்து வருவதாக ரஷ்ய விமான போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7)

## ...டரும் பதற்றம்; ...ல் 25 பேர் பலி!

அவ்வகையில், காஸா முனையில் இருந்து இஸ்ரேல் நாட்டின் மீது ஹமாஸ் போராளிகள் ரொக்கெட்டுகளை ஏவி மிகப்பெரிய தாக்குதல் நடத்தியதாகவும், அவற்றில் பலவற்றை தங்களது ஏவுகணைகள் இடைமறித்து அழித்ததாகவும் இஸ்ரேல் அரசு தெரிவித்திருந்தது.

இந்தத் தாக்குதலில் இஸ்ரேலில் சில வீடுகள் சேதமடைந்ததாகவும் ஓரிருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், இஸ்ரேல் நடத்திய எதிர்த்தாக்குதலில் ஒரு கர்ப்பிணி, 13 மாத கைக்குழந்தை உட்பட பாலஸ்தீனத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையில் கடந்த ஆண்டு மே மாதம் நடந்த உச்சகட்ட மோதலில் 270 இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொன்று குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வான் தீப்பிடித்து 8 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த வான் திடீரென தீப்பிடித்து எரிந்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.


பாகிஸ்தானின் லாகூர் நகரில் இருந்து ராவல்பிண்டி நோக்கி 16 பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் இரவு ஒரு வான் சென்றுகொண்டிருந்தது. அந்த வான், ஜீலம் நகரின் அருகே சென்றபோது திடீரென வானின் முன்பகுதியில் இருந்து கரும்புகை வெளியேறியது. சிறிது நேரத்தில் தீப்பிடித்தது. இதனைக் கவனித்த சாரதி, வானின் வேகத்தை குறைத்து நிறுத்தினார்.

அதற்குள் வான் முழுவதும் தீப்பற்றியது. வானுக்குள் இருந்தவர்கள் தீயில் சிக்கிக்கொண்டனர். பின்னர் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் 8 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 4 பேர் படுகாயமடைந்தனர். 4 பேர் ஜனனல் வழியாக குதித்ததால் காயமின்றி தப்பினர். (7)



## தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பினரின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் - பாக்.அரசு



(இஸ்லாமாபாத்)

மசூத் அசாரின் ஜெய்ஷ் இ முகமது, லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத்தாவா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தினரின் செயற்பாடுகளை கண்காணிக்குமாறு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் சர்வதேச பயங்கரவாதியாக அண்மையில் அறிவிக்கப்பட்ட ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் சொத்துக்களை முடக்கவும், வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள தடையும் விதித்து பாகிஸ்தான் அரசு உத்தரவு பிறப்பித்தது.

இதுதவிர, ஏற்கனவே லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத்தாவா உள்ளிட்ட சில பயங்கரவாத இயக்கங்களுக்கும் சில தலைவர்களுக்கும் பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

ரம்ழான் நோன்பு மாதத்தில் செல்வந்தர்களிடம் இருந்து ஏராளமான நன்கொடைகளை பெறும் இந்த பயங்கரவாத அமைப்புகள் அவற்றை உள்நாடு மற்றும் இந்தியா மீதான பயங்கரவாதத் தாக்குதல்களை ஊக்குவிப்பதற்காக செலவிட்டு வருகின்றன.

இந்நிலையில், மசூத் அசாரின் ஜெய்ஷ் இ முகமது, லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத்தாவா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தினரின் செயற்பாடுகள் மற்றும் நிதி பரிவர்த்தனைகளை தீவிரமாகக் கண்காணிக்குமாறு மாகாண அரசுகளுக்கு இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அரசின் உள்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (7)

## லிபியாவின் தலைநகரில் ஒரு வாரம் போர் நிறுத்தம்

(திரிபோலி)

லிபிய தலைநகர் திரிபோலியில் ஒரு வார காலம் போர் நிறுத்தம் மேற்கொள்ளும்படி ஐ.நா. வேண்டுகோள்விடுத்துள்ளது. லிபியாவில் ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி கடாபி, 2011 ஆம் ஆண்டு கொல்லப்பட்டதில் இருந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ளதுடன் பல்வேறு ஆயுதக் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டுவருகிறது.

கலிபா கப்தார் தலைமையிலான ஆயுதக் குழுவினர் நாட்டின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்தக் குழுவினர், சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுப் படைகளுடன் போரிட்டு வருகின்றனர்.

அரச படை வசம் உள்ள தலைநகர் திரிபோலியை கைப்பற்றுவதற்காக கலிபா கப்தார் தலைமையிலான ஆயுதக் குழுவினர் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து உக்கிரமான தாக்குதலை நடத்தி வருகின்றனர்.




இந்தப் போரில் சுமார் 400 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 2000 பேர் காயமடைந்துள்ளனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஊரைவிட்டு வெளியேறியும் உள்ளனர்.

இந்நிலையில், புனித ரம்ழான் மாதம் ஆரம்பமாக இருப்பதால், மனிதாபிமான உதவிகளை தடங்கலின்றி வழங்குவதற்காகவும் பொதுமக்கள் சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்யவும் திரிபோலியில் ஒருவார காலம் போர் நிறுத்தம் மேற்கொள்ளும்படி ஐ.நா அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஒரு வார காலத்தில் கைதிகளையும் போரில் இறந்தவர்களின் உடல்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்றும், இந்த விடயத்தில் தேவையான உதவிகளை செய்யத் தயாராக இருப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொடரும் அசாதாரண சூழ்நிலை

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் புத்தளத்தில் இளைஞன் உயிரிழப்பு!

### வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தகவல்

(மாரவில)

**புத்தளத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மாரவில பொலிஸ் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 31 வயது இளைஞனே உயிரிழந்துள்ளார்.**

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மாரவில நகரத்தில் இந்தத் துப்பாக்கிசசூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிலாபம் - முகுனுவட்டன பிரதேசத்தைச் சேர்ந்த அஜித் பிரசன்ன என்ற 31 வயது இளைஞனே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மாரவில நகரத்தில் நேற்று முன்தினம் இரவு நின்ற சிலரை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். இதன்போது அவர்களில் ஒருவர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். காயமடைந்த இளைஞனை மாரவில வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையையடுத்து நாடு முழுவதும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### ஆயுதங்களை ஒப்படைக்க

# 'கால அவகாசம் நீடிப்பு'

(கொழும்பு)

வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களை வைத்திருப்போர் உடனடியாக பொலிஸ் நிலையங்களில் கையளிக்கப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசமானது. மேலும் 48 மணித்தியாலங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 12 மணியுடன் நிறைவடையவிருந்த கால அவகாசமானது, மேலும் 48 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### குண்டுத் தாக்குதல் தொடர்பில்

# எம்.பிக்களிடம் விசாரணை நடத்துவதற்கு தடை ஏற்படுத்தப்படாது- சபாநாயகர்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விசாரணை நடத்துவதற்குத் தடை ஏற்படுத்தப்படாது என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு தரப்பினரை பணிக்கும் பொறுப்பு தம்முடையதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு எந்த வகையிலும் தடைகளை ஏற்படுத்தப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் இடையூறு செய்யப்படாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சாஹிரா கல்லூரியில் முகத்தை மூடும் ஆடைகளுக்குத் தடை!



(கொழும்பு)

கொழும்பு சாஹிரா கல்லூரியில் முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக நேற்றுத் திங்கட்கிழமை பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இந் நிலையிலேயே சாஹிரா கல்லூரியில் முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அத்துடன், இதுகுறித்த சிறப்பு அறிவித்தல் ஒன்றையும் பாடசாலை நிர்வாகம் வெளியிட்டுள்ளதுடன், அதனைப் பாடசாலையின் பிரதான வாயிலிலும் காட்சிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, முகத்தை மூடும் ஆடைகள் அணிவதற்குத் தடை விதிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அண்மையில் [illegible] வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறிமடம் சான்றோர்க்கு அணி

அறிந்தும் அறியாமலும் இரு! அப்படி என்று பெரியவர்கள் கூறுவார்கள். அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்கள் எல்லாம் அப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

பழமொழி நானூறு என்று ஒரு சங்க இலக்கியம். அதுவே ஒரு பழமொழியாக வருகின்றது. அதாவது– அறிமடம் சான்றோர்க்கு அணி அப்படி என்று! அறிந்தும் அறியாதது போன்று நடக்கின்றது. ஞானிகளின் சிறப்பு அப்படி என்று அதற்கு அர்த்தம்.

பக்தி அதிகமாகப் போகின்றது என்றாலே சில பேர் ஸ்பைத்தியம் போன்று கூட நடந்து கொள்வார்கள். அதை நாம் பிழையாக புரிந்து கொள்ளக் கூடாது.

ஒரு முல்லைக்கொடி வளரும் என்பதற்காக தன்னுடைய தங்கத் தேரையே நிறுத்தி வைத்தார் பாரி. அவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ஒரு மயில் குளிரினால் அவதிப்படுகின்றது என்பதற்காக அதற்கு தன்னுடைய பீதாம்பரத்தையே போர்த்தினாரே பேகன்! அவரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? வரகுண பாண்டியனைப் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அவர்கூட பக்தி அதிகமாகப் போனதனால் ஒரு சமயம் கொஞ்சம் வித்தியாசமாக நடந்து கொண்டிருக்கின்றார். வேறு ஒன்றும் இல்லை!

திருவிடைமருதூர்! இருக்கெல்லே! அங்கே ஒரு இடத்தில் எள் காய வைத்திருந்தார்களாம்! அதற்காக கோயிலிற்கு எண்ணெய் தயார் செய்வதற்காக!

அந்தச்சமயம் பார்த்து அந்தப் பக்கமாக ஒருத்தர் வந்திருக்கின்றார். எள் காயப்போட்டிருந்ததைப் பார்த்தார். என்னவோ நினைத்தார். அந்த எள்ளில் ஒரு கை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டார்.

சுவாமிக்கு உபயோகப்படுத்துவதற்காக காய வைத்திருக்கின்ற எள்ளை இப்படி அள்ளி வாயிலே போடலாமா? அது பெரிய பிழை! சிவ அபராதம்!

அங்கே காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் இதை பார்த்து விட்டார்கள்.

ஐயையோ! அபசாரம்! அபசாரம்! என்று கத்திக் கொண்டே ஓடி வந்தார்கள். அந்த ஆளை பிடித்துக் கொண்டார்கள். நேராக கொண்டு போய் வரகுண பாண்டியன் முன்னாடி நிறுத்தினார்கள். வரகுண பாண்டியன் நிமிர்ந்து பார்த்தார். பார்த்த அவருக்கு மிகவும் ஆச்சரியமாகப் போனது! ஏன் என்றால்... எள்ளை அள்ளி வாயிலே போட்டுக் கொண்டவர் எப்படி இருக்கின்றார் தெரியுமா?

நெற்றியிலே திருநீறு! உடம்பெல்லாம் பக்திமயம்! இப்படிப்பட்ட சிவ பக்தரா அந்த சிவ அபராதத்தை செய்தார்? ராஜாவாலே இதை நம்ப முடியவில்லை! அதனால் மிகவும் அன்பாகவே அந்த ஆளைப் பார்த்து தாங்கள் ஏன் இப்படி ஒரு காரியத்தை செய்தீர்கள்? அப்படி என்று கேட்டார்.

அதற்கு அந்த சிவபக்தர் கூறினார். நான் பசியின் காரணமாக அந்தக் காரியத்தை செய்யவில்லை! இந்த ஊர் எனக்கு மிகவும் பிடித்துப்போய் விட்டது. சிவ அபராதம் செய்தால் ஏழு ஜென்மங்களுக்கு இந்தக் கோயிலிற்கு செக்கு இழுகின்ற மாடாக பிறப்பேன் என்பது எனக்குத்தெரியும். அதற்காக தான் அப்படிச் செய்தேன் என்றார்.

அந்த ஊரிலேயே பிறக்க வேண்டும்! அதுவும் செக்கு மாடாகப் பிறக்க வேண்டும்! அந்த ஆலயத்திலேயே தொண்டு செய்ய வேண்டும். ஒரு தவறு செய்தால் தான் அது சாத்தியம் என்கின்றதை புரிந்து கொண்டு அவர் அப்படி செய்திருக்கின்றார். அப்படிப் பட்ட பக்தி! வரகுண பாண்டியன் பார்த்தார். எங்கே, உங்கள் வாயைக் கொஞ்சம் திறவுங்கள்! என்றார்.

அந்த சிவ பக்தர் வாயைத் திறந்தார்.

அங்கே கூடியிருந்தவர்கள் எல்லாம், ராஜா அந்த ஆளுடைய வாயைக் கிழிக்கப் போகின்றார் என்று நினைத்தார்கள். ஆனால் ராஜா என்ன செய்தார் தெியுமா?

அவர் வாயில் ஒட்டிக்கொண்டிருந்த ஒரு எள்ளை எடுத்து தன் வாயிலே போட்டுக் கொண்டார். அதற்குப்பின் கூறினார். நீங்க செய்த அபராதத்தை நானும் செய்து விட்டேன்! உங்களோடு சேர்ந்து நானும் செக்கு இழுப்பேன்! என்றார்.

இதுதான் சான்றோர்கள் இயல்பு. இப்படி பக்தியினால் தவறு செய்கின்றவர்கள் அந்தக் காலத்தில் அதிகம். புத்தியில்லாமல் தவறு செய்கின்றவர்கள் தான் இந்தக் காலத்தில் அதிகம். ஒரு ரைஸ் மில்லில் நெல்லுக் காய வைத்தார்கள்!

அதை திருடி விட்டு ஒருத்தன் ஜெயிலுக்கு வந்தான். ஜெயில் அதிகாரிகளிடம் மிகவும் நெருக்கமாகப் பழகி விட்டான். தண்டனைக் காலம் முடிவடைந்து விடுதலையாகி வெளியிலே புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்னர் ஜெயில் அதிகாரி அவனைப் பார்த்து வெளியிலே போய் என்ன செய்யப் போகின்றாய்? என்றார்.

மறுபடியும் எங்கேயாவது நெல்லுக் காய வைத்திருந்தால் அதை திருடலாம் என்று இருக்கின்றேன்! என்றார்.

ஏன்டா ...பாவி ...நீ திருந்தலையா? என்றார் அந்த அதிகாரி!

திருந்தி விட்டேன் சேர்... இருந்தாலும் எப்பவும் உங்களிடமே தொண்டு செய்யனும் என்று ஒரு ஆசை...!அதற்கு இதுதான் வழி என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ




Rube Since 1982 Jewellery

நம்பிக்கை, கைராசி
மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 35 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ரூபி ஜுவல்லறி




எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

பொன்சேரும் பொன்னான நன்நாளம் அக்ஷய திருதியை இன்று 07.05.2019

எமக்கு யாழ் நகரிலோ, இலங்கையின் எப்பாகத்திலோ வேறு எந்தக் கிளைகளும் கிடையாது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074




அக்ஷய திருதியை நன்னாளில் அனைவரது இல்லங்களிலும்
செல்வங்கள் பெருகிட பிரார்த்திப்போம்...

# சிறி மீனாட்சி நகை அகம்

Dealers in 22 Kt. Solid Gold Jewellery

பொன்சேரும் பொன்னான நன்னாளம் அக்ஷய திருதியை இன்று (07.05.2019) எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்

**Sree Meenakchi** Nagai Aham
இல. 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6109




# நியூ வீ.எம்.கே ஜுவல்லர்ஸ் இன்

## அக்ஷய திருதியை அழைப்பிதழ்

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் சித்திரைத் திங்கள் 24 ஆம் நாள் (07.05.2019) செவ்வாய்க்கிழமை இன்றைய நாளிலே அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை எனும் திருநாளிலே தரம், நம்பிக்கை, கைராசி அனைத்திற்கும் உரித்தான உங்கள் வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ்

ஸ்தாபனத்தில் தங்க நகைகளை பெற்று என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட அன்போடு அழைக்கின்றோம்.

தங்க நகைகளை கொள்வனவு செய்து எமது அன்புப் பரிசில்களையும் பெற்றுச் செல்லுங்கள்.

கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பேசி: 021 227 1616

80/03, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 2515, 077 784 9369

இந்த பொன்னான நாளை மேலும் அழகாக்க

# கன்னிஹா

உடன் கொண்டாடிடுங்கள்

"அக்ஷய திருதியை" முன்னிட்டு புத்தம் புதிய டிசைன்கள், அதிக ரகங்கள் என தங்கத்தில் விழாக்கோலம் பூண்டுள்ளது உங்கள் கன்னிஹா வியப் பூட்டும் சலுகைகள் சிறப்புப் பரிசுகள் மற்றும் சிறப்புக் கொள்முதல் திட்டங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. இந்த அக்ஷய திருதியை நன்னாளில் உங்கள் வாழ்க்கை புதுப் பொலிவோடு ஜொலிக்க கன்கிஹாவின் வாழ்த்துக்கள்.

மங்களம் பொங்கும் அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு வைகாசி 07 ஆம் திகதி இன்று 7.31 முதல் இரவு 8.00 மணிவரை எமது காட்சியறை உங்களுக்காகத் திறந்திருக்கும்.

"நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


இல. 99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் - 021 222 4448



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் பலத்த பாதுகாப்புடன் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்



(கொழும்பு)

நாட்டில் நிலவிய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக பிற்போடப்பட்டு வந்த பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் தலைநகர் கொழும்பில் பாடசாலைகளின் பிரதான நுழைவாயிலில் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன் மாணவர்கள் பாடசாலைகளுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் பாடசாலைகளுக்குள் உள்வாங்கப்பட்டிருந்ததுடன், பாடசாலைக்கு அருகிலான பொது போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-7)











வடக்கில் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பித்தன. எனினும் மாணவர்களின் வரவு முழுமையாக வில்லை என்று பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

நாட்டில் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களையடுத்து இரண்டாம் தவணைக்காக பாடசாலைகளை ஆரம்பிப்பது பிற்போடப்பட்டிருந்தது. இதனையடுத்து பாடசாலைகளில் கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு நேற்று மீளவும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனாலும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் புத்தகப் பைகள் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் இராணுவம், பொலிஸார் இணைந்து சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே மாணவர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு சோதனைகளுக்கு மத்தியிலும் பாதுகாப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் முதல் நாளில் மாணவர்களின் வருகை என்பது வீழ்ச்சியாகவே காணப்பட்டது. (இ-9-30-114)

## மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு மாகாண மொழி பெயர்ப்பாளர் சேவையின் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது 27.04.2019, 28.04.2019 ஆகிய தினங்களில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பரீட்சையானது பிற்போடப்பட்டிருந்தது.

எனினும் குறித்த பரீட்சையினை எதிர்வரும் 11,12.05.2019 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் எம்மால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்த அனுமதி அ[illegible] காணப்படும் நேர அ[illegible] மற்றும் பரீட்சை நிலையம் என்பன மாற்றமின்றிக் காணப்படும்.

அத்துடன் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக 27.04.2019 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை 11.05.2019 ஆம் திகதி சனிக்கிழமையும், 28.04.2019 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை 12.05.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் அ.சிவ[illegible] [illegible]ளார். (இ)

## வெல்லம்பிட்டிய தொழிற்சாலையில் கைதானவர்கள் பிணையில் விடுவிப்பு

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவரான மொஹமட் இல்ஹாம் என்பவருக்குச் சொந்தமான தொழிற்சாலையிலிருந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9 நபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறித்த நபர்களை தலா 5 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர்களுக்கெதிராக பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் வெல்லம்பிட்டிய பொலிஸாரால் காரணங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் பிணையை நிராகரிப்பதற்கான போதுமான காரணிகள் பொலிஸாரிடம் காணப்படாததன் காரணமாக அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

நிர்ப்பந்தத்தின் பேரில் முறையே ஜேம்ஸ் பீரிசுடனும் ஈ.ஜே.சமரவிக்கிரமவுடனும் (இலங்கைச் சீர்திருத்த லீக் தலைவர்) தமிழர்களின் யாழ்ப்பாணச் சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

புதிய சீர்திருத்த்தின் ஏற்பாடுகளின் கீழ் இரு சமூகங்களுக்குமான சம நிலையைப் பேணுவதற்கு பிரதானமாகச் சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்ட குறிப்பிடக் கூடிய தொகை தமிழரைக் கொண்டிருக்கும் வடமேல் மாகாணத்தில் புத்தளம், சிலாபம் பகுதித் தமிழருக்கான விசேடமாக ஓர் ஆசனம் பற்றிய விடயம், இப் பேச்சுவார்த்தையின் மையமாக இருந்தது.

சிலோன் ஒப்சேவர் பத்திரிகையில் சில வருடங்களின் பின்னர் வெளியான அருணாசலத்தின் ஒரு பேட்டியில் அவரால் வருமாறு தெளிவாகச் சொல்லப்பட்டது.

தமது நிலை பாதுகாக்கப்படும் வரையில் காங்கிரஸ் கட்சியில் சேர்வதற்கு ஆரம்பத்தில் தமிழர் மறுத்தனர். சிங்களத் தலைவர்களான ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம இருவராலும் தமிழருக்கு சிங்களப் பெரும்பானமையினரால் நீதியானதும் தாராளமானதுமான ஏற்பாடுகள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட பின்னர் எனது சொந்தச் செல்வாக்கினாலேயே தமிழர் இதில் சேர்வதற்கு இணங்கினர்.

மேலும் அவர் கூறிய மேற்கோள் காட்டுகின்றார்.

1918 டிசெம்பரில் இந்தக் கனவான்கள் அளித்த வாக்குறுதியின் பேரில் முக்கியமானதும் செல்வாக்குமிக்கதுமான அமைப்பான யாழ்ப்பாணச் சங்கத்துக்கு எழுத்தில் ஒரு உறுதிமொழி வழங்கப்பட்டது. நானே இந்த உறுதிமொழிக்கு உத்தரவாதம் அளித்தேன்.

சிங்கள உயர்மட்டத்தினரால் அருணாசலத்திற்கும், தமிழர்களுக்கும் அளிக்கப்பட்ட உறுதிமொழி 1918 டிசெம்பர் 7 ஆம் திக திடப்பட்ட ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே. சமரவிக்கிரம இருவரிடமிருந்து வந்த கடிதத்தில் மேலும் தெளிவு செய்யப்படுகின்றது.

இலங்கைத் தேசிய சங்கம், இலங்கைச் சீர்திருத்தச் சங்கம் என்பவற்றின் தலைவர்கள் என்ற முறையில், யாழ்ப்பாணச் சங்கத்தினால் முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டத்தையும், அது தீர்மானங்கள் உள்ளடக்கும் பல்வேறு கொள்கைகளிலிருந்து வேறுபடாத பட்சத்தில் நாம் ஏற்றுக் கொள்வோம் என உறுதிமொழி அளிக்கின்றோம்.

யாழ்ப்பாணச் சங்கம் உண்மையில் நியாயமற்ற எதனையும் வற்புறுத்தாது என நாம் நிச்சயமாக நம்புகின்றோம். அத் தேர்தல் தொகுதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வரையில் மேல் மாகாணத்தில் தமிழருக்கென ஆசனத்தை ஒதுக்குவதற்கான ஏற்பாட்டை நாம் முனைப்புடன் ஆதரிப்போம் என உறுதியளிக்கத் தயாராய் உள்ளோம்.

எனவே மேல் மாகாணத்திற்கான ஆசனம் தமிழருக்கு ஒதுக்கப்படுமெனத் தமிழருக்கு உறுதிமொழிகள் அளிக்கப்பட்டதெனத் தெளிவாகத் தெரிகின்றது. சட்ட நிருபண சபையின் தமிழ்ப் பிரதிநிதியாகவிருந்த ஏ. சபாபதிக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்திலும் அவர்கள் வாக்குறுதிகளை அளித்திருந்தனர்.

இந்த வாக்குறுதியினால் உங்களுக்கு வட மாகாணத்தில் மூன்று ஆசனங்களும் கிழக்கு மாகாணத்தில் இரு ஆசனங்களும் (உங்களால் முடிந்தால் இவ் எண்ணிக்கையை நீங்கள் அதிகரிக்கலாம்). தமிழருக்கு ஏனைய மாகாணங்களிலும் கொழும்பு மாநகர சபையிலும் இருக்கின்ற சந்தர்ப்பங்களுடன் மேல் மாகாணத்தில் பிரதேச தொகுதி அடிப்படையில் ஓர் ஆசனம் ஒதுக்கப்படவுள்ளதும் சாத்தியமாகின்றது.

சிங்கள உயர்மட்டத்தினர் தமிழரின் நலன்களும் அரசியல் உரிமைகளும் புதிய சீர்திருத்தங்களினால் பாதுகாக்கப்படும் என வாக்குறுதி அளித்தனர் என்பதை இக் கூற்றுக்கள் உறுதி செய்கின்றன.

அத்துடன் தமிழர் அருணாசலத்திலும் அவருடைய நேர்மை மீதும் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையினாலும், மதிப்பினாலும் அவர் இப் பேச்சுவார்த்தைகளுக்குச் சாட்சியாகவும் மத்தியஸ்தராகவும் இருந்தமையாலும் ஈற்றில் இணங்கினர்.

1919 நவம்பர் 11 ஆம் திகதியன்று இலங்கைத் தேசியக் காங்கிரஸ் நிறுவப்பட்ட போது இந்திய காங்கிரஸைப் போன்று இலங்கைக்குத் தனியானதொரு அரசியல் இயக்கத்தை உருவாக்க வேண்டுமென்ற அருணாசலத்தின் கனவு நிறைவேறியது.இந் நிகழ்வு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலமாகவே நாம் கொண்டிருந்த இலக்குகளையும் நம்பிக்கைகளையும் இலங்கையராகிய நாம் இன்று ஈட்டியுள்ளோம். இலங்கைத் தேசிய காங்கிரஸ் இன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை எம் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந் நாட்டின் வரலாற்றில் விசேடமான நாள் எனச் சொல்லப்படக்கூடிய இந்நிகழ்வில் பங்கு பற்றக் கூடியதாகவிருப்பது எமக்கெல்லாம் பெரிய வரப்பிரசாதமாக உள்ளது.

எனவே நாமெல்லோரும் பொது நன்மை எனும் இலக்கை அடைவதற்கு சாதி, சமயம், ஏனைய வேறுபாடுகள் சம்பந்தமான முற்தப்பபிப்பிராயங்களைக் கடந்து நாமெல்லோரும் சமமானவரே என்பதை ஏற்றுக் கொண்டு இந்தக் காங்கிரஸின் ஊடாக உழைப்போமாக.


தமிழர் மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தமது சிங்களச் சகோதரர்களை ஏற்று பொதுவான இலக்கை அடைவதற்கு ஒன்று பட்டனர் என்பதைத் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியான இச் செய்தி குறிக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும்

## மாவை.சேனாதிராசா கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

21.04.2019 அன்று இயேசு கிறிஸ்து உயிர்த்த நாள் "ஈஸ்டர்" கொண்டாட்டங்களின் போது ஐ.எஸ்.ஐ.எஸ். மத அடிப்படைத் தீவிரவாதிகளால் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பிரபல (ஹோட்டல்) விடுதிகளிலும் தற்கொலைக் குண்டுதாரிகள் வெடி வைத்து 250 பொதுமக்களை கொன்று குவித்தும் 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கடுமையான காயங்களுக்கும் ஆக்கி விட்டமை இலங்கை மக்களையும் உலகத்தையும் பேரதிர்ச்சியில் வீழ்த்தியிருக்கிறது. அதன் விளைவுகள் தொடர்கின்றன.

இத்தகைய அடிப்படை முஸ்லிம் மதவாத, தீவிரவாத பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக நாட்டில் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அவசரகால பிரகடனத்தினால் அப்பாவிப் பொதுமக்கள் குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட இடமளிக்கக் கூடாதென்றே 24/04 ஆம் நாளை துக்க நாளாக கடைப்பிடிக்குமாறு மக்களை அழைத்த போதும் குறிப்பிட்டிருக்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலை.மாணவத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி கிடைத்ததும் .நானும் கோப்பாய் பொலிஸ் நிலையம் சென்று அங்கு அடைக்கப்பட்டிருந்த மாணவர்களைச் சந்தித்திருந்தேன்.

நானும் ஒரு மாணவனாக இருந்த காலத்தில் யாழ்.கோட்டை "கிங் கவுஸிலும்" கொழும்பு நாலாம் மாடியிலும் கூட விசாரிக்கப்பட்ட, சித்திரவதைப்பட்ட உணர்வுகளுடன் தான் அந்த மாணவர்களைச் சென்று பார்த்தேன்.

பொலிஸ் நிலையத்திற்கு வெளியே வந்ததும் அம் மாணவர்களை விடுதலை செய்யுமாறு அரச தரப்பிடம் உயர் அதிகார மட்டத்துடன் பேசியிருக்கின்றேன்.

பல்கலைக்கழகத்தில் இராணுவச் சோதனைக்காக விடுமுறையிலிருந்த மாணவர்கள் அழைக்கப்பட்டனர். இந்த மாணவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்.சர்வதேசத் தலைவர் அபுபக்கர் அல்பக்தாகியின் படத்தையோ அல்லது சஹ்ரான் ஹாசிம் படத்தையோ வைத்திருந்தவர்களல்ல.

நிச்சயமாக அவர்களின் ஆதரவாளர்களுமல்ல. அவர்களின் சின்னங்களையோ அடையாளங்களையோ கொண்டவர்களோ அல்ல. ஏதும் வன்முறைகளில், குற்றங்களில் ஈடுபட்டவர்களுமல்ல. உண்மையில் ஐ.எஸ். ஐ.எஸ்.இஸ்லாம் அடிப்படைவாதத்துடன் யாழ்.பகல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தமற்றவர்கள் என்பது தெளிவானதே. எம் பல்கலை.மாணவர்கள் தமிழ் உணர்வாளர்கள். பல்கலைக்கழகத்தில் சோதனையின் போது கைப்பற்றிய கிளைமோர் குண்டு என்பது போலியானவை. மக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டவைகள் என அறிகின்றோம்.

இந்நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அவசர கால பிரகடனத்தினையும் பல்கலை. மாணவர் மீது பயன்படுத்துவது ஏன்? நீதித்துறையினர் கூட பொலிஸ் துறையினரிடம் கேள்வி எழுப்பியிருக்கலாம். இப்பொழுது அரசிடமும் சட்டமா அதிபரிடத்திலும் இக்கேள்விகளை எழுப்பி அம்மாணவர்களையும் ஊழியனையும் விடுதலை செய்யுமாறு எழுத்து மூலமும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று கோர வேண்டியது, செயற்பட வேண்டியது என்னவெனில்,

1. ஐ.எஸ். ஐ.எஸ்.சர்வதேச முஸ்லிம் அடிப்படைவாத பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் இலங்கையில் அவசர காலச் சட்டத்தினாலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட (**Prevention of Terrorism Act**) நடவடிக்கைகளினாலும் மக்களின் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இராணுவ மயமாக்கலுக்கு இடமளிக்கப்படாமலும் பொதுமக்களும் வாழ்விடங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

2. பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் மற்றும் நடைமுறையிலுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (**Prevention of Terrorism Act**) தவறாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் கைதாகியுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஊழியரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்என்பது தான்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இளைஞர் அணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படங்கள் மற்றும் தமிழீழ வரைபடம் என்பன கைப்பற்றப்பட்டன எனத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் ஆகிய இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராக பயராங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகிகளை கைது செய்தமை எமது மக்களை தொடர்ச்சியாக ஒரு அச்ச நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன் எமது மக்களினுடைய இயல்பு வாழ்க்கையையும் மாணவர்களின் மனதில் இனம் சார்ந்த பற்று உருவாவதை தடுப்பதுமாகும். இது நன்கு திட்டமிட்டு செய்யப்படும் ஒரு செயற்பாடாகும். இந்த செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1713

Search for people, places and things

### வினோத்

கஷ்டப்பட்டு ஜன்னலோரத்தில சீட் பிடிச்சு ஒரு குட்டித் தூக்கம் போடலாம்னு உட்கார்ந்தா... Balance தாரேன்னு சொல்லிட்டுப் போன கண்டக்டரை நினைச்சு தூக்கமே வரல



### நகுலன்

வீடு திரும்பும் போது நம் வீடு அழிந்திருந்தால் எப்படி வலிக்குமோ... அதேபோல்தான் பறவையின் வீடான மரங்கள் அழிக்கப்படுகையிலும்



### பவித்திரன்

வாழ்க்கையில் மிகச்சிறந்த பொக்கிசம் சரியான நேரத்தில் கிடைக்கும் ஆறுதலும் மாறுதலும் தான்



### நிரோசா

எதிலும் குறைகளை காண்பவர்களுக்கு ரசிக்கத் தெரியாது... எதையும் ரசிப்பவர்களுக்கு குறைகளே தெரியாது...!



### பானு

நேர்மையாய் இருந்து என்ன சாதித்தாய் என கேட்பவர்களிடம் தைரியமாகக் கூறுங்கள் நேர்மையாக இருப்பதே இங்கு பெரிய சாதனைதான் என்று



### குமணன்


யாருக்காகவும் எதுக்காகவும் எப்போதுமே இந்த மூனு விடயத்தை விட்டுக் கொடுக்காதீங்க... காலை சாப்பாடு, மதிய சாப்பாடு, இரவுச் சாப்பாடு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பக்கத்தில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதி சஹ்ரானின் வாகனச்சாரதியின் நெருங்கிய சகா வெடிபொருட்களுடன் கைது





(ஏறாவூர்)

டெட்டனேற்றர் வெடிபொருட்களுடன் நேற்று நண்பகல் ஒருவரை குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.


மட்டக்களப்பு ரிதிதென்ன ஓமடியாமடு பிரதேசத்தில் வைத்தே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 138 டெட்டனேற்றர் குச்சிகளை குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதுடன் கைதுசெய்யப்பட்டவரிடம் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட நபர் 48 வயதுடைய ஆதம் லெப்பை காதர் என அடையாளம் காணப்பட்டதுடன் பயங்கரவாதி சஹ்ரா னின் வாகனச் சாரதியான அண் மையில் கைது செய்யப்பட்ட கபூரின் நெருங்கிய சகாவென விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

# சொத்துச்சேதங்களுக்கு நட்டஈடு

## பிரதமர் ரணில் உத்தரவு



(கொழும்பு)

நீர்கொழும்பில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட அமைதியின்மையால், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நட்டஈடு வழங்குமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த சேதங்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு, அதற்கான நட்டஈட்டை வழங்குமாறும், சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரதமர் யோசனை வழங்கியுள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் சேதங்களுக்கான அலுவலகம் ஊடாக சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# மகிந்தவிடம் நேரில் கடிதத்தை கையளித்த ஐ.தே.க.எம்.பிக்கள்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர்.

இதன்போது, உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலையடுத்து ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது தொடர்பான யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளித்துள்ளனர்.

இந்தக் கடிதத்தின் நகலொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்த்தன, ஹெக்டர் அப்புஹாமி ஆகியோரின் கையொப்பத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனவால் நேற்று முன்தினம் மாலை மகிந்தவிடம் இக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் அங்கஜன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளர் இருவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதன் மூலம் பல்கலைக்கழகத்தின் நீண்டகால பாரம்பரியம் பேணப்படுவதுடன், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையாமல், சுமுகமாக இடம்பெறுவதற்கு, மாணவர்கள் விடுதலையாக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் கைதாகியிருந்த நேரம் முதல் அவர்களை விடுவிப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் முயற்சிகளை முன்னெடுத்தே வருகின்றேன். நான் சரியான பொறிமுறைகளை பின்பற்றி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்புகின்றேன்.

படித்த இளைஞர்.யுவதிகள் திசைமாறி போகக் கூடாது என்பதையும் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றேன்.

ஆரம்பிக்கப்பட்ட இடம் வேறாக இருந்தாலும் அது யாழ்.பல்கலைக்கழகத்தில் முடிந்தமை கவலையளிக்கின்ற விடயமாகவுள்ளது. இரு மாணவர்களின் விடுதலைக்கான கோரிக்கையோடு. யாழ்.மாவட்டத்தின் ஒட்டுமொத்த மாணவர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்ற பதற்றம் தொடர்பாகவும் தெரிவித்துள்ளேன்.

பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தையும் சூழ்நிலைகளையும் சிலர் தமக்கு சாதகமாக்கியுள்ளனர்.

நான் எந்தச் சந்தர்ப்பத் திலும் காட்டிக்கொடுத்தோ அல் லது அழித்தோ அரசியல் செய்ப வன் அல்ல எனவும். ஆனால் எமது வரலாற்றில் காட்டி கொடுப் புக்கள் இன்றும் தொடர்ச்சியா கவே இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலைக்காக தொடர்ச்சியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மாணவர்களின் விடுதலை தொடர்பாக விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30-114)

# புத்தர் சிலை உடைப்பு கைதானவர்களுக்கு தொடர்ந்தும் மறியல்

(மாவனல்ல)

மாவனல்லயில் புத்தர் சிலை உடைப்பு தொடர்பில் கைதான 13 பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை மேற்குறித்த 13 பேருக்கு மேலதிகமாக அண்மையில் நாவலப்பிட்டிய பிரதேசத்தில், பாதணிகள் விற்பனை நிலையம் ஒன்றில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டு. தற்பொழுது குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ள சாதிக் அப்துல்லாஹ் மற்றும் ஷாஹித் அப்துல்லாஹ் ஆகியோர் மாவனல்லயில் புத்தர் சிலை உடைப்பு சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (இ-7)

# கேரளாவில் இலங்கையர் கைது

இலங்கையர் ஒருவர் கேரளாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உரிய பயண ஆவணங்களைச் சமர்ப்பிக்காமையையடுத்தே அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

தம்பனூர் பேருந்து நிலையத்தில் நின்றபோது சந்தேகம் கொண்ட பொலிஸார் அவரை விசாரித்துள்ளனர்.

இதன்போது தம்மை மலுகே ஜூத் செல்பொன் டயஸ் என்று குறித்த இலங்கையர் அடையாளப்படுத்தியுள்ளார்.

தனது கடவுச்சீட்டு உட்பட்ட ஆவணங்கள் கைப்பையில் இருந்து திருட்டுப்போய் விட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்தியாவுக்கு வந்த காரணத்தை அவர் கூறவில்லை.

இதனையடுத்து, அவர், தமிழகம், நாகர்கோவில் பொலிஸ் [illegible] லப்பட்டுள்ளார். (இ-7)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 100 | 70 | 120 |
| தக்காளி | 100 | 110 | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 200 | 140 | 120 | 80 |
| கோவா | 80 | 70 | 60 | 50 | 100 |
| கரட் | 80 | 90 | 100 | 80 | 140 |
| பூசணி | 50 | 50 | 30 | 30 | 40 |
| புடோல் | 80 | 80 | 80 | 50 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 55 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 80-150 | 110 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 170 | 140 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 50 | 60 |
| லீக்ஸ் | 60 | 120 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 40 | 100 |
| கறிமிளகாய் | 60 | 70 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 160 | — | 250 | 70 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 40 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 250 | 270 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 20-40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 150 | 150 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 200 | 350 | — | — | — |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெய்ப் பொருள் நாயனார்



ஒருத்தர், விழுப்புரத்துக்கிட்ட இருக்கிற திருக்கோவிலூர் என்கிற ஊரை ஆட்சி செய்திருந்தார். அவர் பேரு மெய்ப்பொருள் நாயனார்.

அவரை வேறு எந்த நாட்டு ராஜாவாலையும் ஜெயிக்க முடியலை. காரணம் அவர்கிட்ட இருந்த சிவ பக்தியும் விசுவாசமான வீரர்களும் தான். அதில்லாமல் அவரும் எல்லாருக்கும் நிறைய வாரிவாரிக்கொடுத்து உதவி செய்வார். அதனால் எல்லாரும் அவரை சாமி மாதிரி கும்பிட்டாங்க.

இதைப்பார்த்த மற்ற நாட்டு ராஜாக்கெல்லாம் பொறாமையாகப் போச்சு, இவரை எப்படியாவது தோற்கடிச்சு, இவருடைய நாட்டை பிடிக்கணும்னு பல தடவை முயற்சி செய்து தோற்றிட்டாங்க.

விபூதி பூசி ருத்ராட்சம் போட்டுக்கிட்டு யார் வந்தாலும் அவுங்களுக்கு தேவையான துணி, சாப்பாடுன்னு கொடுப்பார்..

இதைத் தெரிஞ்சுகிட்ட எதிரி நாட்டு ராஜா ஒருத்தன் என்ன செய்தான், தன்கிட்ட இருந்த ஒற்றன் ஒருத்தனை திருக்கோவிலூருக்கு சிவனடியார் வேஷத்தில அனுப்பி வைச்சான். அவன் பேரு முத்தநாதன்.

அவனும் வேஷம் கட்டிக்கிட்டு நாட்டுக்குள்ள நுழைஞ்சுட்டான். நேரே அரண்மனைக்கு போனான். இவனுடைய விபூதியையும் ருத்ராட்சத்தையும் பார்த்த காவல்காரங்க உள்ளே விட்டுட்டாங்க.

மன்னர் மெய்ப்பொருள் நாயனார் அரச சபையில் இருந்தார். சபைக்கு ஒரு சிவனடியார் வருகிறார் என்றவுடன், அவரை ஓடி வந்து வரவேற்றார்.

சிவனடியார் வேஷத்தில இருந்த முத்தநாதன், தன்னுடைய வேலையை ஆரம்பித்தான். அவன் மன்னனை நோக்கி, மன்னா நான் பல அரிய மந்திரங்களையெல்லாம் பல காலம் தவம் செய்து பெற்றிருக்கிறேன். அவற்றில் சிலவற்றை உங்களுக்குத் தரவே நான் வந்திருக்கிறேன் என்றான்.

இதைக்கேட்ட மன்னனும் மகிழ்ந்து, ஐயா நாங்கள் செய்த பாக்கியம் இது. உங்கள் விருப்பப்படி பெற்றுக்கொள்ள தயாராயிருக்கிறேன் என்றார். இதை சற்றும் எதிர்பார்க்காத முத்தநாதன் சமாளித்துக் கொண்டு, ஐயா இதை நான் எல்லோர் முன்னிலும் உங்களுக்குத்தர முடியாது.

தங்களது தனியான இடத்தில் தான் தரமுடியும். ஆக அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றான்.

மன்னனும் தன்னுடைய தனிமாளிகைக்கு முத்தநாதனை அழைத்துச் சென்றார். சிவனடியார் வேஷத்திலிருந்த முத்தநாதன் ஏதோ மந்திரம் ஜெபிப்பது போல் நடித்து, மன்னர் காணாத வேளையில், தன்னுடைய இடுப்பில் மறைத்து வைத்திருந்த கோடரியாலே, மன்னர் மெய்ப்பொருள் நாயனாரை வயிற்றில் குத்தி கீழே தள்ளினான்.

இதை அரண்மனை ஒற்றன் ஒருவன் பார்த்துவிட்டு, முத்தநாதனை கையும் களவுமாய் பிடித்து, கொலை செய்ய பாய்ந்து விட்டான்.

இதைக்கண்ட மன்னர் மெய்ப்பொருள் நாயனார், முத்தநாதனை பிடித்த தனது வீரனை, "தத்தா நமர்" இவர் நம்மவர், இவர் கெடுதல் செய்திருந்தாலும் இவருக்கு நாம் தீங்கு செய்யக்கூடாது. ஆகவே இவரை நம் நாட்டு எல்லைவரை ஜாக்கிரதையாய் கொண்டுவிட்டு வரவேண்டியது உன் பொறுப்பு என்று கூறி உயிரை விட்டார்.


மன்னரை சிவனடியார் வேஷத்தில் வந்த ஒருவன் கொன்றுவிட்டான் என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவி மக்களனை வரும் அரண்மனைமுன் கூடிவிட்டனர்.

தனக்கு சதி மூலம் தீங்கு செய்தவனுக்கும் கருணை காட்டி உயிர் பிச்சையளித்த மன்னர் மெய்ப்பொருள் நாயனாரின் சிவபக்தி இன்றளவும் பக்தியுடன் போற்றப்படுகிறது.

## பொது அறிவு துணுக்குகள்

- உலகின் வெண்தங்கம் - பருத்தி.
- ஆரிய இனத்தவர்களின் தாயகம், மத்திய ஆசியா.
- வங்கப்பிரிவினை இரத்து செய்யப்பட்ட ஆண்டு, 1911.
- இந்தியாவை ஆட்சி செய்த கடைசி இந்தியப் பேரரசர், ஹர்ஷர்.
- வினிகரில், அசிடிக் அமிலம் உள்ளது.
- தாவரங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பது, பொட்டாசியம்.
- சைக்கிளைக் கண்டுபிடித்தவர், மாக்மில்லன்.
- திரவ நிலையில் உள்ள உலோகம், பாதரசம்.
- 'தாவர வகைப்பாட்டியலின் தந்தை' என்று அழைக்கப்படுபவர், லின்னேயஸ்.
- இரத்தச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம், 120 நாட்கள்.
- நீண்ட தொலைவு பறக்கும் ஆற்றலும், நீண்ட நேரம் வானில் வட்டமிடும் திறனும் கொண்ட பறவை, புறா.
- உயிரினங்களில் நெடுநேரம் மூச்சை அடக்கும் சக்தி பெற்றது, முதலை.

## புள்ளிக் கோழி



கொக்கொக் கொக்கோ என்று குஞ்சைக்
கூட்டிக் கொண்டு திரியும்
பக்கத்திலே காகம் வந்தால்
பறந்து பறந்து கலைக்கும்

தம்பிக் குஞ்சு சத்தம் போட்டால்
தலையைத் தூக்கிப் பார்க்கும்
குப்பை கிளறிப் பூச்சி புழுக்கள்
கொத்தித் தின்னக் கொடுக்கும்

காற்றுக் கிளைகள் ஆடினாலும்
காதைக் கொடுத்துக் கேட்கும்
சோற்றைப் போட்டால் குஞ்சைக் கூவிச்
சொண்டால் கிளறிக் காட்டும்

புள்ளிக் கோழி எங்கள் கோழி
பொரித்த குஞ்சு பத்து
வெள்ளைக் குஞ்சு மூன்று நல்ல
வெடிவால் குஞ்சு ஏழு

வட்டமிட்டுப் பருந்து வந்து
வானத்திலே பறந்தால்
செட்டைக்குள்ளே குஞ்சை வைத்துத்
தெய்வம் போலக் காக்கும்



**மன்னன்:** எதிரி நாட்டு மன்னனின் அறைகூவலை இனிமேலும் நம்மால் பொறுத்துக்கொள்ள இயலாது மந்திரியாரே!

**மந்திரி:** போருக்குத் தயாரென ஓலை அனுப்பட்டுமா மன்னா?

**மன்னன்:** வேண்டாம் அறைகூவல் கேட்காவண்ணம் சவுண்ட் புரூஃப் [illegible] அமைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப் பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும். ~ டாக்டர் அப்துல் கலாம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எல்லாம் குழப்பம் என்றால் என்னதான் செய்ய முடியும்

சித்திரைக் குழப்பம், ஆடிக்கலவரம் என்ற சிக்கல் இலங்கையில் எப்போதும் தொடரவே செய்கிறது.

அதிலும் சித்திரை முதல் ஆடி ஈறான காலப் பகுதி தமிழ் மக்களுக்கு இன்னும் துன்பம் தருவதாகும்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றைப் பார்க்கும் போது கடுமையான துன்பங்களைத் தந்த மாதங்களாக மே, ஜூலை மாதங்கள் உள்ளன.

இப்போதும் அந்த நெட்டூரம் தொடரவே செய்கிறது.

எந்த நேரம் எங்கே குண்டு வெடிக்கும் என்று தெரியாத நிலைமை; மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் இருக்கக்கூடிய ஏக்கம், சுற்றிவளைப்புகள், குடும்பப்பதிவுகள், அடையாள அட்டையுடன் திரிகின்ற கட்டாயங்கள், ஏறி இறங்கி மூட்டை முடிச்சுகளுடன் நடந்து சோதனைக்குட்பட்டு அலைகின்ற பரிதாபங்கள் என ஏகப்பட்ட தொந்தரவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம்.

இவை ஒருபுறமிருக்க, இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் மண் மீட்புப் போராட்டம் நடத்தியதனூடாகப் படைத் தரப்பை எதிர்த்தனர் என்ற விடயம் பதிவாகியுள்ளதே தவிர, மற்றும்படி தமிழ் மக்கள் ஒன்றுசேர்ந்து சிங்கள மக்களை எதிர்த்து சண்டையிட்டதோ அன்றி முஸ்லிம் மக்களுடன் முட்டி மோதியதான சம்பவங்களோ எவையும் நடந்ததாக இல்லை.

சுருங்கக்கூறின் இலங்கையில் இனக்கலவரத்தில் ஈடுபடாமல்; இனங்களுடன் குழுச் சண்டை போடாமல், அமைதியாக வாழ்ந்து வருபவர்கள் தமிழ் மக்கள் என்றால் அது நிராகரிக்க முடியாத உண்மை.

ஆம், நேற்று முன்தினம் நீர்கொழும்புப் பகுதியில் சிங்கள – முஸ்லிம் குழுக்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அங்கு ஏற்பட்ட முறுகல் நிலை ஒரு கணப்பொழுதில் சமூகவலைத்தளங்களை ஆக்கிரமித்துக் கொண்டது.

அதில் ஒரு சில காட்சிகளைப் பார்த்தபோது, முஸ்லிம் தரப்பு ஒன்றாக நின்று தமக்கான எதிர்ப்பை எதிர்கொள்ளத் தயாராக இருந்ததைக் காண முடிந்தது.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம், படையினரின் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், கைதுகள் என ஏகப்பட்ட விடயங்கள் நடக்கின்றபோதிலும் அதுபற்றி முஸ்லிம் மக்கள் அச்சம் கொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக, அவர்கள் தங்களை சிறுபான்மை இனமென்று இம்மியும் சிந்திக்காமல் தங்களுக்கு எதிராக யார் வந்தாலும் அவர்களை எதிர்ப்போம் என்பது போல நின்றமையைக் கண்டபோது, இவ்வாறான ஒரு சூழ்நிலைதான் அமைதியை ஏற்படுத்தி வைத்திருக்கிறதோ என்று எண்ணத் தோன்றியது.

இதை நாம் கூறுவதன் நோக்கம் எக்காலத்திலும் தமிழ் மக்கள் குழுவாகத் திரண்டு எந்த இனத்துடனும் முரண்பட்டுக் கொள்ளவில்லை என்பதைக் கூறுவதுதான்.

இவ்வாறு தமிழ் மக்கள் ஒதுங்கி ஒதுங்கி வாழ்ந்ததன் விளைவாகத்தான் இன்றுவரை நாம் மிதிபடுகிறோமா? என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுஎவ்வாறாயினும் அமைதிதான் மிகப் பலமான ஆயுதம் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

### திலீபனின் தூபி அமைக்க நீதிமன்றம் அனுமதித்தது

# நீதிமன்றத் தீர்ப்பை மேற்கோள் காட்டி சட்டத்தரணி சுகாஷ் மன்றில் வாதம்

(யாழ்ப்பாணம்)

தன் உடலை மருத்துவ பீடத்துக்காய் அர்ப்பணித்த யாழ்.மருத்துவபீட மாணவன் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படத்தை எந்த அடிப்படையில் பயங்கரவாத சட்டத்தினுள் உள்வாங்க முடியுமென யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் ஆஜரான சட்டத்தரணி சுகாஷ் மன்றில வாதம் முன்வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிற்றுண்டிச் சாலையில் திலீபனின் ஒளிப்படத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை ஊழியர் சார்பில் நேற்றைய தினம் யாழ் நீதவான் நீதிமன்றில் ஆஜரானபோது இவ்வாறு தனது வாதத்தை முன்வைத்தார்.

அது மட்டுமல்லாமல் கடந்த வருடம் திலீபனின் தூபியைப் புனரமைப்பது தொடர்பான வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்படும் நிதிக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றால் தூபி அமைக்கலாம் என்ற நீதிமன்றத்தீர்ப்பை மேற்கோள்காட்டி குறித்த நபரின் சிற்றுண்டிச்சாலை உணவருந்தும் இடத்தில் காணப்பட்ட திலீபனின் ஒளிப்படத்தால் தேசிய பாதுகாப்பிற்கோ இன நல்லிணக்கத்துக்கோ குந்தகமாக அமையாதென தனது பக்க வாதத்தை முன்வைத்தார்.

வாதங்களை கேட்ட நீதவான் நாளை புதன் கிழமை பிணை வழங்குவதா? வழக்கிலிருந்து விடுவிப்பதா? என்ற கட்டளை வழங்கப் படும் என யாழ்ப்பாண நீதி மன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர்போல் தெரிவித்தார். (ம-3,10)

## இராணுவத்தின் சீருடை வைத்திருந்தவர் மறியலில்

சாவகச்சேரி தனங்களப்பு பகுதியிலுள்ள வீடொன்றில் படையினர் பயன்படுத்தும் சீருடை, தொப்பி, ரீ சேட் ,இராணுவச் சின்னம், தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் அடையாள அட்டை ஆகியவை நேற்றுமுன்தினம்படையினர் மற்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

முஸ்லிம் வீடொன்றில் படையினர் பயன்படுத்தும் பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டதோடு வீட்டின் உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்த நபரை நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது எதிர்வரும் 17/5/2019 வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மனறு உத்தரவிட்டது.(ம-114)

## வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு மொழிபெயர்ப்பாளர் சேவைக்கான

### போட்டிப் பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பொதுச சேவைக்கு மாகாண மொழி பெயர்ப்பாளர் சேவையின் மொழி பெயர்ப்பாளர் தரம் 2 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது 27.04.2019, 28.04.2019 ஆகிய தினங்களில் நடத்துவதற்குப் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளைக் கருத்திற் கொண்டு பரீட்சையானது பிற்போடப் பட்டிருந்தது.

எனினும் குறித்த பரீட்சையினை எதிர்வரும் 11,12.05. 2019 திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் எம்மால் ஏற்கெனவே அனுப்பிவைக்கப் பட்டிருந்த அனுமதி அட்டையில் காணப்படும் நேர அட்டவணை மற்றும் பரீட்சை நிலையம் என்பன மாற்றமின்றிக் காணப்படும்.

அத்துடன் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்ட தற்கு அமைவாக 27.04.2019ம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் 11.05.2019ம் திகதி சனிக்கிழமையும்28.04.2019ம திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் 12.05. 2019ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதனையும் அறியத் தருகின்றேன் என்று அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (ம)

## கடும் காற்றால் 40 வீடுகள் சேதம்

பொலநறுவை- திம்புலாகல பகுதியை ஊடறுத்து வீசிய காற்றால் 40இற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலநறுவை மாவட்ட உதவி பணிப்பாளர் உபுல் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திம்புலாகல, தம்மிந்த, அருணபுர உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.(இ-7)

## நாடாளுமன்றத்துக்கு வருகின்றது பொலிஸ்மா அதிபர் மீதான சர்ச்சை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மீதான சர்ச்சை தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் விவாதிக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் எந்தவித குற்றச்சாட்டுமின்றி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து தேசிய பாதுகாப்பிலுள்ள குறைபாடுகளைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸ்மா அதிபரை இராஜினாமா செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இருந்தபோதும் அவர் பதவி விலகவில்லை. பூஜித ஜெயசுந்தரவுக்கு கட்டாய விடுமுறையை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதன்பின்னர் பதில் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது.

இதன் காரணமாக பொலிஸ்மா அதிபரை பதவியிலிருந்து அகற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பற்றிய பல கேள்விகள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## பொரளையில் பாரிய வெடிப்பு வீடு தீக்கிரை! மூவர் காயம்

பொரளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வனாத்தமுல்லை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பாரிய வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகப் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் மின் பிறப்பாக்கியொன்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாக குறித்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதில், வீடொன்று தீக்கிரையானதாகவும் 3 பேர் தீக்காயங்களுக்குள்ளாகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

குறித்த வெடிப்புச் சம்பவத்தால் அப்பகுதி முழுவதும் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில டச்றோட் அச்சுவேலி, அக்கரை, வளலாய் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா கிராமத்திலும், மன்னார் பிரதேசத்தில புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ ஆன்மிக வழியில் தேடும் இன்பமே உண்மையான இன்பம்.
- ❖ கடவுள் நம்மோடு எப்போதும் இருக்கிறார். ஆனால், நம் கண்ணுக்கு புலனாவதில்லை.
- ❖ குறிக்கோளுக்குரிய முக்கியத்துவத்தை, அதை அடையும் பாதைக்கும் கொடுங்கள்.
- ❖ [illegible] பழகுங்கள். பயன் கருதி செய்யும் எதுவும் உதவியாகாது.
- ❖ கண்ணில் காணும் அனைத்தையும் கடவுளின் அம்சமாகவே போற்றுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு நல்ல வைத்தியர்கள் இருக்கிறார்கள் வந்து பூரண குணம் பெற்றுச் செல்லுங்கள்

## அப்ரிடி-கம்பீர் டுவிட் மோதல் தொடர்கிறது





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் கம்பீருக்கும் பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஷாகித் அப்ரிடிக்குமான விமர்சன மோதல் தொடர்ந்து வருகிறது.

பாகிஸ்தானின் முன்னாள் வீரர் ஷாகித் அப்ரிடி 'The Game Changer' எனும் தனது சுய சரிதை புத்தகத்தை எழுதியுள்ளார். அதில், இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீரை கடுமையாக விமர்சித்து எழுதியுள்ளார்.

அவருக்கு ஏதோ மன ரீதியான பிரச்சினை இருக்கிறது என்றும் எந்தச் சாதனையும் செய்யாமல் திமிருடன் நடந்து கொள்வார் என்றும் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் கம்பீரை விமர்சிக்கும் வகையில் சில சம்பவங்களையும் அப்ரிடி எழுதியுள்ளார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகை யில் கவுதம் கம்பீர் தனது டுவிட்டர் பக்கத்தில்,

ஷாகித் அப்ரிடியை மன நிலை பாதிகப்பட்டவர் என்று நினைப்பதாகவும் தனிப்பட்ட முறையில் அவரை உளவியல் மருத்துவரிடம் அழைத்துச் செல்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கம்பீருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அப்ரிடி தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரித்துள்ளார். அதில் அவர் கூறுகையில்,

'கம்பீருக்கு ஏதோ மனநல பிரச்சினை இருக்கும் என நினைக்கிறேன். எனக்கு சில நல்ல வைத்தியசாலைகளுடன் தொடர்பு இருக்கிறது. அவருக்கு பாகிஸ்தானில் நல்லவிதமான சிகிச்சை அளிக்க நான் ஏற்பாடு செய்கிறேன். பாகிஸ்தான் மக்களுக்கு பெரும்பாலும் இந்திய அரசு விசா எளிதாக வழங்கி விடாது.

ஆனால், இந்தியாவில் இருந்து வரும் ஒவ்வொருவரையும் நான் வரவேற்கிறேன். எங்கள் தேசத்து மக்களும் அரசும் இந்தியர்களை எப்போதும் வரவேற்பார்கள். கவுதம் கம்பீரையும் வரவேற்போம்,

நான் கம்பீருக்கு விசா பெற்றுக்கொடுத்து, பாகிஸ்தானில் நல்ல வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்கிறேன்' என தெரிவித்துள்ளார். இதனால் கம்பீருக்கும் அப்ரிடிக்கும் இடையிலான வார்த்தை மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. (க)

# அசுர ஆட்டம் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி புதிய வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது




அயர்லாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடக்க வீரர்கள் 365 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளனர்.

பங்களாதேஷ், அயர்லாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் அயர்லாந்தின் டப்லின் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள்-அயர்லாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி மேற்கிந்திய தீவுகள் அணியில் களமிறங்கிய ஜான் கேம்ப்பெல்-ஷாய் ஹோப் இருவரும் அயர் லாந்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர்.

இந்த ஜோடியை பிரிக்க அயர்லாந்து வீரர்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதற்கிடையில், ஷாய் ஹோப் தனது 5 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அதன் பின்னர் கேம்ப்பெல் தனது முதல் சதத்தை விளாசினார்.

இவர்களது இணைப்பாட்டம் 300 ஓட்டங்களைக் கடந்தது. அணியின் ஸ்கோர் 365 ஆக உயர்ந்தபோது கேம்ப்பெல் ஆட்டமிழந்தார். அவர் 137 பந்துகளில் 6 சிக்சர்கள், 15 பவுண்டரிகளுடன் 179 ஓட்டங்கள் விளாசினார்.

ஹோப்-கேம்ப்பெல் தொடக்க ஜோடி 365 ஓட்டங்கள் குவித்து, அதிக ஓட்டங்கள் விளாசிய தொடக்க ஜோடி என்ற சாதனையை படைத்தது. இதற்கு முன்பு பாகிஸ்தானின் பகர் ஜமான்-இமாம் உல் ஹக் ஜோடி 304 குவித்ததே சாதனையாக இருந்தது.

இச் சாதனையை ஊதித் தள்ளியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ஆட்டத்தின் 48 ஆவது ஓவரில் 152 பந்துகளில் 170 குவித்த நிலையில் ஷாய் ஹோப் ஆட்டமிழந்தார். அவர் 2 சிக்சர்கள், 22 பவுண்டரிகள் விளாசினார்.

மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 381 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் களமிறங்கிய அயர்லாந்து அணி 34.4 ஓவரில் 185 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக கெவின் ஓ பிரையன் 77 பந்துகளில் 68 ஓட்டங்கள் எடுத்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில் ஆஸ்லே நர்ஸ் 4 விக்கெட்டுகளும் கேப்ரியல் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நடு மைதானத்திற்கு நடந்து வந்து நடுவரிடம் சண்டையிட்ட டோனி

## தீயாய் பரவும் புகைப்படம்



சென்னை அணியின் தலைவரான டோனி, நடுவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதை ஓவியமாகப் பேருந்தில் வரைந்திருக்கும் புகைப்படம் தற்போது சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்தியாவில் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.தொடர் தற்போது பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. ஏனெனில் சென்னை, மும்பை, டில்லி அணிகள் பிளேஓப் சுற்றுக்குத்தகுதி பெற்றுவிட்டன.

இந்நிலையில் சென்னையின் தலைவரான டோனியின் புகைப்படம் ஒன்று சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது. அந்தப் புகைப்படத்தில் டோனி, ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியின் போது மைதானத்தின் உள்ளே வந்து நடுவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இது பெரிய அளவில் பேசப்பட்டது.

அது தமிழகத்தைச் சேர்ந்த பேருந்து ஒன்றில் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. அதில் டோனி ஆக்ரோசத்துடன் நடுவரிடம் கையை நீட்டி காட்டுவது போன்று வரையப்பட்டு உள்ளது. (க)

# பெங்களூர் அணியில் அதிரடி மாற்றம் ஏற்படும்

## பயிற்சியாளர் அதிர்ச்சி



ஐ.பி.எல்.தொடரில் கடந்த மூன்று சீசன்களிலும் சரிவர விளையாடாத பெங்களூர் அணியில், அடுத்த வருடம் அதிரடி மாற்றம் செய்ய வேண்டி இருப்பதாக அணியின் பயிற்சியாளர் கேரி கிறிஸ்டன் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் விராட் ஹோலி தலைமையில் விளையாடி வரும் பெங்களூர் அணி, முதல் 6 போட்டியில் தோல்வியைச் சந்தித்ததன் எதிரொலியாக, லீக் போட்டியில் இருந்து வெளியேறிய முதல் அணி என்கிற மோசமான பெயரை பெற்றுள்ளது.

2020 வரை அணியின் பயிற்சியாளராக கேரி கிறிஸ்டன் தொடர்வாரா? என்கிற சந்தேகமும் தற்போது நிலவி வருகிறது.

இந்த நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த அணியின் பயிற்சியாளர் கேரி கிறிஸ்டன், இது ஒரு ஏமாற்றமான தொடராக எங்களுக்கு அமைந்துவிட்டது.

ஐ.பி.எல். தொடரில் முதல் 7 போட்டிகளில் எங்களால் 2 புள்ளிகளை மட்டுமே பெற முடிந்தது. இரண்டாவது பாதியில் தான் எங்களால் சில விடயங்களைப் பெற முடிந்தது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த வருடம் அணியில் அதிரடி மாற்றம் செய்ய வேண்டியதற்கான நேரம் நெருங்கிவிட்டது எனவும் அவர் கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரிலுள்ள...

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்திய ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு உறுப்பினர்களுடன் தொடர்பை வைத்திருந்ததாக அமைச்சர் பதியூதீன் மீது குற்றச்சாட்டு காணப்படுகின்றது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துவருகின்றார். கடந்த வாரம் அவர் மஸ்கட் நகரிற்கு விஜயம் மேற்கொண்டார்.

நாட்டில் இல்லாத சமயம்பார்த்து அமைச்சர் பதியூதீனின் இல்லத்தை முப்படையினருடன் இணைந்து பொலிஸாரும் சோதனையிட்டனர்.

இந்த சோதனையின்போது எந்தவித சந்தேகத்திற்கிடமான ஆவணங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாக அந்த வீட்டின் வளாகத்திலிருந்து கூர்மையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-285)

## பயங்கரவாதிக...

தினத்தில் தாக்குதல்களை முன்னெடுத்த பயங்கரவாதக் குழுவின் 140 மில்லியன் ரூபாய் பணம் மற்றும் 7 பில்லியன் பெறுமதியான சொத்து தொடர்பிலான விவரங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சொத்துக்களை முடக்குவது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 73 பேரும் தடுத்துவைத்து விசாரிக்கப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, "நீர்கொழும்பு பகுதியில் இருதரப்பினருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முறுகல்நிலை தொடர்பில் விசாரிப்பதற்காக 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.(ம-3)

## பேராசிரியர் விக்...

ரங்களைப் பாவித்து, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். எனினும் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரனைப் பதவியில் இருந்து நீக்கியமைக்கான காரணங்கள் எதுவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

மேற்படி கடிதத்தில் ஏப்ரல் 30ம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நேற்றைய தினமே மேற்படி கடிதம் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. (ம)

## மக்களின் நம்பிக்...

ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சிவில் சமூக தலைவர்களுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முஸ்லிம்/சிவில் சமூக தலைவர்கள், பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினர் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதோடு, அவர்கள் இந்நாட்டின் ஏனைய மதங்களை சார்ந்த மக்களோடு மிகுந்த ஒத்துழைப்புடன் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினரையும் சந்தேகத்தோடு நோக்குவதால் அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள சிரமங்கள் தொடர்பாக முஸ்லிம் தலைவர்கள் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியதோடு, அனைத்து இன மக்களுக்கிடையேயும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தமது ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் அவர்கள் இதன்போது முன்வைத்தனர்.

மேலும் மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்காக பாதுகாப்புத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு தமது பரிபூரண ஒத்துழைப்பினை பெற்றுத்தரும் அதேவேளை, அடிப்படைவாதக் கொள்கைகள் உருவாகுவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் கட்டுப்படுத்துவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ஒரு சில இஸ்லாமியர்களிடம் காணப்படும் மூட நம்பிக்கைகளை இல்லாதொழித்து அவர்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றும் தற்போது முன்னெடுக்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தினால் எந்தவொரு இனமும் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில் அனைவரது கௌரவத்தையும் பாதுகாத்து ஒரு நாடு என்ற வகையில் இந்த சவாலை வெற்றிகொள்வதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளை இதன்போது முஸ்லிம் சிவில் சமூக தலைவர்கள் பாராட்டியதோடு, இத்தகைய தொரு நிலைமையில் நாட்டில் அமைதியான சூழலை பேணுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு முதல் நாட்டினுள் முன்னெடுத்துவந்த நல்லிணக்க வேலைத்திட்டங்களும் உறுதுணையாக அமைந்தனவென அவர்கள் சுட்டிக்காட்டினர். (ம-3)

## பாராளுமன்ற...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.பியசேனவுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த பின்னரும் ஒரு வருடத்திற்கு அரசாங்க வாகனத்தை பயன்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டு அவர், கடந்த 2016 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோதே அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டமையால் 4 வருட சிறைத்தண்டனையும் 5.4 மில்லியன் ரூபாய் அபராதமும் விதித்து நீதவான் உத்தரவிட்டார். (ம-3)

## பல்கலை மாணவ...

கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படத்தினை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

தேசத்தில் உள்ள வீடுகள், கடைத் தொகுதிகள் அரச புலனாய்வுப் பிரிவினரினால் சோதனையிடப்பட்டன.

இதில் காத்தான்குடியில் இருந்து அம்பாந்தோட்டை சென்று பயிற்சி பெற்ற பன்னிரண்டு பேரில் ஒருவர் மட்டக்களப்பு தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் மரணமடைந்ததாகவும் ஏனைய பதினொரு பேருமே அரச புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டு அவர்களின் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் காத்தான்குடி பொலிஸாரிடம் நேற்று திங்கட்கிழமை இரவு ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

# பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட மூவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் ஊழல் ஒழிப்பு குழுவின் பணிப்பாளர் ஆகியோரை எதிர்வரும் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டாய விடுமுறை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# நாட்டின் பாதுகாப்புக் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்த இரண்டு நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழு நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கட்சித் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கூடியது.

இதன்போதே இன்று மற்றும் நாளை விவாதத்தை நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த பாராளுமன்ற பொது மக்கள் கெலரியை இன்று முதல் மீண்டும் திறப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# புலனாய்வை காட்டிக் கொடுத்ததன் விளைவே பயங்கரவாத தாக்குதல்!

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச புலனாய்வுப்பிரிவை ஐக்கிய தேசியக் கட்சி காட்டி கொடுத்தமையின் விளைவே நாட்டில் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் கருத்திற்கு செவிசாய்த்து அரச புலனாய்வு பிரிவை ஐக்கிய தேசியக் கட்சி காட்டி கொடுத்தமையின் விளைவே இன்று சர்வதேச தாக்குதலுக்கு இடமளித்துள்ளது.

இந்நிலையில் அரசியல் பழிவாங்கல்களுக்காக சிறைபிடித்துள்ள புலனாய்வு பிரிவினரை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார். (ம-3)




சுபிரி வாசனா
திகதி 2019/05/06
சீட்டிழுப்பு இலக்கம் 1424
எழுத்து 12 | வெற்றி இலக்கம் 19 22 31 57 | 20 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/05/2019
சீட்டிழுப்பு இலக்கம் 376
வெற்றி எழுத்து P | சுப்பர் இலக்க 04 | வெற்றி இலக்கங்கள் 21 29 33 80

கொவிசெத
திகதி 2019.05.06
சீட்டிழுப்பு இலக்கம் 2111
ஆங்கில எழுத்து J | வெல்லப்பட்ட இலக்கங்கள் 20 27 40 66
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/05/06
சீட்டிழுப்பு இலக்கம் 3911
ஆங்கில எழுத்து F | வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 8 9 2 7 2
தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் இருந்தவ...

வாள் முனையில் அச்சுறுத்தி 20 பவுண் தங்க நகைகளையும், 75ஆயிரம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் புலோலி, உபயகதிர்காமம், கந்தமுருகேசனார் வீதியில் உள்ள விக்னேஸ்வரன் யுகசீலன் என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, அதிகாலை வேளையில் கதவை உடைத்து உள்நுழைந்த நான்கு முகமூடிக் கொள்ளையர்கள் வாளினைக் கொண்டு வந்து வீட்டாரின் கழுத்தில் வைத்து சத்தமிட்டால் கொலை செய்து விடுவோம் என அச்சுறுத்தி வீட்டை சல்லடை போட்டு தேடுதல் நடத்தி அங்கிருந்த 20 பவுண் தங்க நகை, 75 ஆயிரம் ரூபாய் பணம், இரண்டு தொலைபேசி என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ள வேளையில் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. (ம-60)


### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

### காணி தேவை

மருதனார்மடம் சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் றோட் அருகில் 2 பரப்பு காணி தேவை. தொடர்பு கொள்ளவும். (தரகர் உட்பட) 0774163146

### வீடு விற்பனைக்கு

வட்டு. கிழக்கு வட்டுக்கோட்டை, குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். 0778037876


## 13 பவுண் தாலி...

தாலிக்கொடி அறுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குச் சென்று திரும்பிய பெண்ணிடம் தாலிக்கொடி அறுக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு கொள்ளையர்களால் தாலிக்கொடி இழுத்து அறுக்கப்பட்டதால் கழுத்துப்பகுதியில் படுகாயமடைந்த பெண், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் - நாவலர் வீதியைச் சேர்ந்த சந்திரன் நிரஞ்சனா (வயது - 40) என்பவரே கழுத்துப் பகுதியில் காயத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணம் நல்லூர் மகா விஷ்ணு ஆலய கொடியேற்றத் திருவிழாவுக்குச் சென்று கச்சேரி - நல்லூர் வீதியால் நேற்று பிற்பகல் வீடுதிரும்பிய அவரை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இடைமறித்து தாலிக்கொடியை அறுத்தெடுத்து தாலியுடன் கொண்டு சென்றுள்ளனர்

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-101)

## தனித்திருந்த...

யிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியின் கழுத்தில் காணப்படும் அடையாளத்தை வைத்தே கழுத்து நெரித்து அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், அவர் அணிந்திருந்த நகை மற்றும் வீட்டிலிருந்த பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளது என உறவினர்கள் தெரிவித்தனர் எனவும் கூறினர்.

தெல்லிப்பழை மகாதனையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கமலாதேவி (வயது -70) என்ற மூதாட்டியே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மூதாட்டியின் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்ற உறவினர்கள், அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3)


### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6232)


## தனிப்பட்ட முரண்...

தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை தடைசெய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு - (யாழ். மாவட்டம்) முஹம்மது உமர் ரியாஸ், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபருக்கு அச்சுறுத்தல் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடிதத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த நபர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த போது அந்த நபர் இத்தகைய கடிதத்தை அனுப்பி வைக்கவில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடிதத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாக குறித்த நபருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலேயே இவ்வாறானதொரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து, அச்சுறுத்தல் கடிதத்தை அனுப்பிய சந்தேக நபர் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## ஐ.எஸ் இன் ஆயு...

முகாம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானின் முக்கிய சாரதியான கபூர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த பிரதேசத்திற்கு நேற்று திங்கட்கிழமை சென்ற இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினர் தற்போது குறித்த பகுதியை சுற்றி வளைத்துள்ளனர்.

மகாவலி திட்டத்திற்குச் சொந்தமான 25 ஏக்கர் நிலப்பரப்பை வேறு ஒருவரின் பெயரில் குத்தகைக்கு வாங்கி பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளனர். காட்டுப்பகுதியில் அமைந்துள்ள குறித்த நிலத்தில் வீடொன்றும் காணப்படுகிறது. அங்கிருந்தே தாக்குதல்களுக்கான திட்டம் மற்றும் ஆயுத உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அத்தோடு, நிலக்கீழ் முகாமொன்றை அமைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போது நிலத்தை தோண்டும் நடவடிக்கைகளை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்துள்ளனர்.

மேலும் நுவரெலியாவில் முகாம் ஒன்றும் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட 38 பேர் குறித்த இடத்தில் பயிற்சி பெற்றதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

அம்பாறை, சாய்ந்தமருது பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த முகாம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிளக் பூல் பகுதியில் உள்ள பாடசாலைக்கு மிக அருகிலுள்ள இரண்டு மாடி கட்டிடமே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில், கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய மொஹமட் சஹ்ரான் உள்ளிட்ட 38 தீவிரவாதிகள் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் நுவரெலிய பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கியை மீள் பொருத்தும் பயிற்சி மற்றும் கடந்த 21 ஆம் திகதிக்கு முன்னராக ஏப்ரல் 17 ஆம் திகதியன்று, தாக்குதலுக்கான இறுதி பயிற்சி சஹ்ரான் தலைமையில் இந்த கட்டிடத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால குத்தகை அடிப்படையிலே குறித்த இரண்டு மாடி கட்டிடத்தை இந்த தீவிரவாதிகள் குத்தகைக்கு பெற்றுள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சுற்றிவளைக்கப்பட்ட இரண்டு மாடி கட்டிடத்தின் உரிமையாளர் உட்பட பணியாளர் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்த நபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார், இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-3)


வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் Emerald Isle நிறுவனத்தை ஆரம்பித்த சிகரம் வழங்கும்

### New Zealand, Australia & Canada
Student Visa - Work Visa - Migration

| | |
|---|---|
| O/L or A/L சிறந்த பெறுபேறு உள்ளவர்களுக்கு | பல்கலை அனுமதி & விசா ஏற்பாடு |
| சிறந்த பெறுபேறு இல்லாதவர்களுக்கு | விசேட கற்கைநெறியுடன் பல்கலை அனுமதி & விசா |
| தொழில்பயிற்சி, அனுபவமுள்ளவர்களுக்கு | தொழில் விசா ஏற்பாடு |
| பட்டத்துடன் தொழில் அனுபவமுள்ளவர்களுக்கு | வேலைவாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை ஏற்பாடு |

விளக்கக் கருத்தரங்கு 11-05-2019 சனிக்கிழமை காலை 10 மணி

பதிவுக் கட்டணம் ரூ.500

மேலதிக விபரங்களுக்கு 077 36 16 798, 021 222 00 11

SIKARAM ACADEMY
Business - Hospitality - English

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk
Sikaram Academy

### காசி யாத்திரை

ஆரம்பம் : 19.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

**தரிசிக்கும் இடங்கள் :**

டெல்லி நாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா (தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்ம பூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங்
பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், 2 பேருக்கு வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன் (C-6301)
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102 / 077 736 2154
Email : Sriranganathan2601@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

### ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8702)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532




### புதிய வினோ நகை மாடம்

அட்ஷய திருதியை - 07.05.2019. செல்வம் பெருகிட அட்ஷய திருதியை வாழ்த்துக்கள்

சிறந்த விலைக்கழிவுடன் 22 கரட் தங்க நகைகள்!

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

தரம் மாறாத தங்க நகைகளுக்கு ஒரே இடம்

பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கி அருகாமை)
தொ.பே இல. : 077 600 2588
(சி-6313)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org